# இமயமலை அல்லது தியானம்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஆக்கியோர் :
திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

மூன்றாம் பதிப்பு

1950

உரிமை
ஆக்கியோர்க்கே

விலை அணா 12

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை.

# முன்னுரை

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு விழா, சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில், பண்டிதமணி - கதிரேசஞ் செட்டியார் தலைமையில் 1930-ம் ஞு டிசம்பர்மீ 25, 26, 27உகளில் நடைபெற்றது. மூன்றாம்நாள் கூட்டத்தில் ' இமயமலை ' என்னும் பொருள்பற்றிப் பேசும் பேறு எனக்குக் கிடைத்தது.

அப்பொருள்பற்றிப் பேசித் தொகுப்புரை கூறி யான் அமர்ந்ததும், மேடை மீதிருந்த பலர், அப்பேச்சைப் பத்திரிகையில் எழுதி வருமாறும், பின்னை அதை நூலாக வெளியிடுமாறும் விண்ணப்பித்தனர். அவருள் சமாஜ அமைச்சர் - திருவாளர் - மயிலை - பாலசுப்பிரமண்ணியனாரும், திருவாளர் - கிழக்குமருதூர் - நாராயண சாமியாரும் பெரிதும் வலியுறுத்தி உறுதிமொழியும் பெற்றுக் கொண்டனர். அன்பர்கள் விருப்பத்துக்கிணங்கி, எனது பேச்சை ' நவசக்தி 'யில் வாரந்தோறும் எழுதி முற்றுவித்தேன். அப் பேச்செழுத்துப் பொருளைக் கொண்டதே இந்நூல். நூலின் உள்ளுறைக்கேற்ப நூலுக்கு ' இமயமலை அல்லது தியானம் ' என்னும் முடி சூட்டப்பட்டது.

இந்நூற்கண் - இமயத்தின் புற அகப்பொருள், இமயத்தின் தொன்மையும் விழுப்பமும், மலைகளின் சிறப்பு, மலைக்கும் மக்கள் வாழ்வுக்குமுள்ள தொடர்பு, மலைவாழ்வின் பெற்றி, உயர்நோக்கின் மேன்மை, அமைதியில் அறிவு விளக்கம், கோபுரங்களின் நோக்கமும் நுணுக்கமும், உலகில் ஆங்காங்கே தோன்றிய குருமார் மலையுடன் தொடர்பு கொண்டமை, தமிழரின் மலைவாழ்வு, காவியங்களில் மானத மலைப்படைப்பு, மலைவாழ்வால் உடலும் உயிரும்

நலனுறல், தற்கால அமைதியில்லா வாழ்வுச் சிறுமை, மேல் நாட்டுப் புலவர்கள் மலையைக் கொண்ட சிறப்பு, இமயம் ஈனும் பொருள்கள், இமயத்தில் பெரியோர் வாழ்தலின் உட்கிடக்கை, இமய இயற்கையினின்றுங் கடவுள் தோற்றத்தைப் புலவர்கள் கொண்டது, இமயத்துள்ள பெருங்குருவின் நிலை, அவரைச் சமய வாதிகள் கொண்ட விதம், குருமார்க்குங் கடவுளுக்குமுள்ள வேற்றுமை, குருமாரைக் கடவுளாகச் சிலர் கொள்ளும் முறை - சிலர் கொள்ளா முறை, இமயத்தின் கூறுகள், அக்கூறுகளின் வெளிப்பொருள் - உட்பொருள், காற்றின் திறம், ஆகாயவிமானிகளின் அநுபவம், கயிலாயத்தின் அகப்புற விளக்கம், இமயவுச்சி காணுதற்குத் தற்கால முற்கால முறைகள், கௌரிசங்கரத்தைப் பற்றிய பல சமயத்தார் கொள்கைகள், அக்கொள்கைகளிலுள்ள ஒருமை, சச்சிதானந்த விளக்கம், மும்மூர்த்திகளை உலகங்கொண்ட வகை, முழுமுதற் பொருள் ஒன்றே என்பது, சமயங்களில் அடிப்படையிலுள்ள ஒற்றுமை, மோனத்தின் தத்துவம், இளமைப்பேறு, இமயத்தின் குறி தியானம் என்பது, தியானத்தின் இன்றியமையாமை, கயிலாயம் சாந்தமென்பது, அமைதித் தவம், சாந்தச் செல்வம் முதலிய பொருள்கள் அடங்கி யிருக்கின்றன. அமைதி வாழ்வை அறிவுறுத்தும் நூல் இந்நூல் என்று சுருங்கச் சொல்லலாம்.

எரிமிகுந்த இந்நாளில், இந்நூலின் உள்ளுறை அமைதிச் செல்வத்தை நல்கி, நாட்டின்வாயிலாக உலகுக்கு நலஞ் செய்யுமென்று நம்புகின்றேன்.

குற்றங் குறைகளை அன்பர்கள் மன்னிப்பார்களாக.

சென்னை
இராயப்பேட்டை
15 - 8 - 1931

திருவாரூர் - வி. கலியாணசுந்தரன்

# இமயமலை அல்லது தியானம்

## தோற்றுவாய்

தலைவர் அவர்களே ! சகோதரிகளே ! சகோதரர்களே !

இப்பொழுது உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக் கொண்ட பொருள் ' இமயமலை ' என்பது. இமயம் மிகப் பெரியது. மிகப்பெரியதற்கு மிகப் பெரிய பேச்சு வேண்டும். யானோ சிறியன்; தற்போது உடல் நலமுங் குன்றப் பெற்றிருப்பவன்; இமயத்தை எங்ஙனஞ் சுமக்க வல்லேன் ? குறிக்கப்பெற்றுள்ள காலம் வரையாதல் அதைச் சுமக்க முயல்கிறேன். ஒருவேளை சிறிது காலங் கடக்க நேரின், தலைவரின் கருணைத் துணையும், உங்கள் பொறுமைத் துணையும் வேண்டும்.

ஈண்டுத் தலைமை வகித்துள்ள பெரியார் ஓர் இமயம். வடமொழி தென்மொழி இலக்கிய ஆராய்ச்சியில் இவர் இமயம் போன்றவர். இவ்விமயத்தின் சாரலில் நின்று, இமயத்தின் நீழலை நோக்கிப் பேசுகிறேன்.

சமய உலகில் நின்று இமயத்தை நோக்கும்போது, இமயத்தின் பொருள் இமயம்போல் ஓங்கி நிற்கும். அப் பொருளோ பேச்சைக் கடந்த ஒன்று. அதுபற்றியே ' இமயத்தின் நீழல் ' என்று குறிப்பிடலானேன்.

இமயத்தின் புறத்தைப் பற்றியே அதன் அகத்தை உணர முயல்வது சிறப்பு. ஆகவே, இமயத்தின் புறத்தைப் பற்றி, அதன் வாயிலாக, அதன் அகமும் ஊடே ஊடே விரவி வருமாறு பேசலாமென்று எண்ணுகிறேன்.

## பொருள்

முதலாவது இமயமலை என்பதன் பொருளை உன்னுவோம். இமயமலை என்பது பனிமலை என்று பொருள்படும். ஹிமயம் - பனி.

இம் மலைக்கு ஹிமாலயம் என்னும் வழக்கும் இருக்கிறது. ஹிம ஆலயம் - பனி வீடு. உலகில் உயர்ந்த பனி வீடு நமது ஹிமயம்.

பனியின் நிறம் என்னை? வெண்மை. வெண்மை எதற்கு அறிகுறி? வெண்மை புனிதத்துக்கு அறிகுறி.

**வெண்மைக் குறி**

அழுக்காறு முதலிய கட்டுகளைக் கடந்த ஒரு நிலையே 'புனிதம்' என்பது. அந்நிலைக்குப் பல மொழியில் பல பெயர்களுண்டு.

இமயத்தின் சிறந்த வெண்மைப் பகுதி கயிலாயமென்று வழங்கப்பட்டு வருகிறது. கயிலையைப் பற்றிய

**கயிலை**

வருணனைகள் பலபடக் கிடக்கின்றன. இவ்வேளையில் சேக்கிழார் பெருமான் வருணனை மீது எனது கருத்துச் செல்கிறது.

> 'பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
> பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
> தன்னை யார்க்கும் அறிவரி யானென்றும்
> மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை'

இத்திருப்பாட்டில் ஆசிரியர் இமயமால் வரைக்கணுள்ள, அதன் சிறந்த உறுப்பாகிய கயிலையை அணி செய்திருத்தல் காண்க.

மேலுஞ் சேக்கிழார் பெருமான் தொடர்ந்து,

> 'அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
> நண்ணு மூன்றுல குந்நான் மறைகளும்

எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது.

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்டளி ராக எழுந்ததோர்
உலக மென்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை'

என்று பாடி மகிழ்கிறார். 'புண்ணியந் திரண்டுள்ளது போல்வது' என்பதும், 'வெண்மலர் போல்வது' என்பதும் உள்ளத்தைக் கவர்கின்றன. இவ்விரண்டும் எடுத்த வெண்மைப் புனிதத்துக்கும் வேண்டப்படுவன. வெண்மையைப் புனிதத்துக்கு - அல்லது புண்ணியத்துக்கு - உவமித்துக் கூறுவது மரபு.

தூய வெண்மையைப் புனிதத்தின் - அல்லது புண்ணியத்தின் - திரட்சி என்று பகர்வது அழகுடைத்தன்றோ? கயிலையின் புறவெண்மையும், அதன் உள்ளுறையாம் புனிதமும் ஒன்றிவரும் முறையில் சேக்கிழார் பாடியிருத்தல் போற்றற்குரியது.

## தோன்மை

இமயமலையின் தொன்மைமீது சிறிது கருத்துச் செலுத்துவோம். இமயமலையின் தொன்மையைக் காலத்தால் அளந்து கூறல் இயலாது. இதுகாறும் வெளிப்போந்துள்ள நிலவியல் ஆராய்ச்சிகளையும், மற்ற ஆராய்ச்சிகளையுங் கூர்ந்து நோக்குழி, இமய மலையைப் பற்றிய நுட்பங்கள் பல கிடைக்கின்றன. இப்பொழுது இந்து மகா சமுத்திரம் என்று சொல்லப்படும் நீர்ப்பரப்பு, நிலப்பரப்பாயிருந்த ஞான்று, இமயமலையின் உடலும், அதன் சூழல்களும் நீருள் மூழ்கிக் கிடந்தன என்றும், விந்தியமலையின்

வடக்கேயுள்ள நிலப்பரப்பு நீருள் அழுந்திக் கிடந்ததென்றும் ஆராய்ச்சிக்காரர் கூறுப.

**இமயம் நீருள்**

இமயமலையின் பல பாகங்களில் கடல்படு பொருள்கள் சில இன்னும் படிந்து கிடத்தல் கண்கூடு. அப்பொருள்கள் நிலவியல் நீரியல் ஆராய்ச்சிக்காரருக்குக் கருவிகளாக நின்று துணை செய்கின்றன. அவைகளைக் கொண்டும், வேறு பல நிகழ்ச்சிகளைக் கொண்டும் இமயத்தின் உடல் நீருள் கிடந்தமை நிறுவப்பட்டிருக்கிறது.

இந்து மகா சமுத்திரம் நிலமாயிருந்தது எக்காலம்? விந்தியத்தின் வடபுலம் நீராயிருந்தது எக்காலம்? இக்கால நிலைகளைப்பற்றி வெளிப்போந்துள்ள ஆராய்ச்சி நூல்களைப் பார்த்தால், ஆண்டுகள் ஆயிரக் கணக்கைக் கடந்து, இலட்சக் கணக்கையும் மேலிட்டு நிற்கின்றன. இங்ஙனமாயின், இமயமலையின் தொன்மையை எக்கால எல்லையில் அளவிட்டுக் கூறுதல் கூடும்?

விந்தியத்தை நோக்க இமயம் குழந்தை யென்று சொல்வோருமுளர். அவர் கூற்றுக்குஞ் சான்றுகளில்லாமலில்லை. இக்காலம் ஆராய்ச்சிக்காலம். ஆராய்ச்சியினின்றும் போதரும் முடிபுகளிலும் முரண்பாடுகளிருக்கின்றன. ஒருவர் கண்ட முடிபு மற்றொருவர் கண்ட முடிபுடன் மாறுபடுகிறது. சரித்திரக் காலத்துக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளில் மாறுபட்ட கருத்துக்களுறுதல் இயல்பே. ஆதலால் ஆராய்ச்சிகளினின்றும் போதரும் முடிபுகளை யெல்லாம் முடிந்த முடிபுகளாகக் கோடல் தவறு. அதனால் இடர்ப்பாடும் நேரும்.

முதலாவது கல்விக்கண் பெறுதல் வேண்டும். அக்கண் ஆராய்ச்சிக் கண்ணைத் திறக்கும். ஆராய்ச்சிக்கண்

நாளடைவில் மற்றுமொரு கண்ணைத் திறக்கும். அவ்வோப் பற்ற கண் திறக்கப் பெறும்வரை எம் முடியையும் முடிந்த பொருளாகக் கோடலாகாது. இது நிற்க.

இமயமலையின் தொன்மையைக் காலத்தால் அளந்து அறுதியிட்டுக் கூறல் அருமை. இமயமலை மிக மிக மிகத் தொன்மை வாய்ந்தது.

## விழுப்பம்

இமயமலை தொன்மையில் மட்டும் விழுப்பமுடையதன்று. வேறு பலவற்றிலும் அம்மலை விழுப்பமுடையது. அதன் விழுப்பம் அளவிடற்பாலதன்று.

இமயம் உலகிலுள்ள எல்லா மலைகளிலும் உயர்ந்தது. அதுவே மலையரசு. அவ்வுயரிய மலையை முடியாக அணிந்துள்ள பெருமை நமது நாட்டுக்கு உண்டு என்று இறுமாந்து கூறுகிறேன். 'மன்னும் இமய மலையெங்கள் மலையே' என்று பாரதியார் களித்தாடுவதைப் பாருங்கள். நாட்டைப் பற்றிப் பாட நேரும்போதெல்லாம் இமயமலை என்னில் மறைவதில்லை. 'பனிவரையை முடியாகப் பல நதியை யணியாக' என்றும், 'மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு' என்றும் பாடிப்பாடி உள்ளங் குளிரப்பெறுவது எனது வழக்கம்.

இமயத்தை உள்ளத்திருத்தி வான்நோக்கி நின்றால், அது வழங்குங் காட்சிப்பெருக்கை என்னென்று சொல்வது? உலகிலேயே அத்தகைக் காட்சி இல்லையென்று சொல்லலாம். பச்சைப் பசேலெனத் துவங்கிச் சுழன்று சுழன்று, கன்னங் கருமையில் நடந்து நடந்து, வெள்ளை வெண்மையில் தவழ்ந்து தவழ்ந்து, நீல வானில் (அமைதியில்) நிறுத்துங் காட்சியை - மண்ணையும் விண்ணையும் முட்டிக் கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்து சேணோங்கும் அப்

பெருங் காட்சியை - எச்சொல்லால் சொல்வது? எவ்வெழுத்தால் எழுதுவது?

இச்சேண்மைக் காட்சியளவில் இமயத்தின் விழுப்பம் அடங்கிவிடுங்கொல்? அது வேறு பல வழியிலும் விழுப்பமுடையது. அவ்விழுப்பக் கூறுகளை நிரலே கிளந்து கூறுதற்கு யான் திருகனல்லன். எடுத்த பொருளுக்கேற்பச் சிலவற்றையாதல் செப்ப முயல்கிறேன். அச்சிலவற்றைத் தெருட்டிச் செப்புதற்கு முன்னர் மலைக்குலங்களைப் பற்றிப் பொதுப்படச் சிலவுரை பகர்தல் ஈண்டைக் கேற்புடைத்தாகுமென்று கருதுகிறேன். அப்பொதுமையில் இமயத்தின் மாண்பு சிலவும் ஒன்றும்.

## மலைப் போது

'மலை, உயிர்களின் வாழ்க்கைக்குத் தாயகம்' என்று கூறல் மிகையாகாது. உயிர்களின் வாழ்க்கைக்குரிய பொருள்கள் பலவற்றை மலை வழங்குகிறது. முதல் முதல் மலையின் போர்வையாகவுள்ள காட்டின்மீது

காடு

நாட்டஞ் செல்கிறது. காடு அடர்ந்த மலையைக் காண்பதுங் கருதுவதும் பெருந்திருவென்றே சொல்வேன். காடடர்ந்த பசுமலை கண்ணுக்குங் கருத்துக்கும் எத்தகை விருந்தளிக்கிறது! அவ்விருந்து உடலையும் ஓம்பி, உயிரையும் ஓம்பி, இளமையழகுப் பேற்றையும் நல்குகிறது.

காடின்றேல் நாடு ஏது? நாட்டைப் பல வழியிலும் ஓம்பி வருவது காடன்றோ? காடளிக்கும் மரத்தைக் கொண்டு வீடு கட்டுகிறோம்; விறகைக் கொண்டு அட்டில் அமைக்கிறோம்; காய்கனிகளைக் கொண்டு வாழ்வு நடாத்துகிறோம். கால்நடைகளுக்குக் காடு பயன்படுகிறது. வயல்களுக்குக் காடு பயன்படுகிறது. கொண்டல்கள் தவழ்ந்து

தேங்கி மழை பொழிதற்கும் காடு துணை புரிகிறது. காடு தெய்வம் போன்று நாட்டைக் காத்து வருவதால், அதனை 'வன தேவதை' என்று பாவலர்கள் போற்றலானார்கள். இத்தகைய காட்டை அணிந்திருப்பது மலை.

மலையினின்றும் ஆறுகள் ஓடி வருகின்றன. ஆறுகள் ஆரங்களாக இயற்கையன்னையை அழகு செய்கின்றன. மலைபடு பொருள்கள் பல ஆறுகள் வாயிலாகவே நாட்டுக்கு வருகின்றன. ஆறுகள் நாட்டுக்கு விளைவையும் வளத்தையும் நல்குகின்றன. ஆறுகளால் விளையும் நலன்கள் பலப்பல. இவ்வாறுகளை அளிப்பது மலை.

ஆறு

மலையில் வளரும் மூலிகைகளின் பெருக்கை என்னென்பேன்? ஆயுளைப் பெருக்கும் மூலிகைகளும், கொடிய விலங்குகளை மருட்டும் மூலிகைகளும் மலையில் வளர்கின்றன. பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும், பலதிற மணிகளையும் மலை வழங்குகிறது. மலை வழங்கும் பொருள்கள் எண்ணில; எண்ணில.

மூலிகை

மக்கள் வாழ்வு முதல் முதல் மலையிலேயே துவங்கப்பட்டது. மலையினின்றுமே மக்கள் மற்ற நிலங்கள் போந்தார்கள். தற்போது உலகில் நிலவும் நாகரிகங்கள் யாவும் மலையிலேயே கால் கொண்டன. பின்னை அவைகள் பற்பல மாறுதலுடன் மற்ற நிலங்களில் வளர்ந்து வரலாயின.

வாழ்வுத் தோற்றம்

மனிதன் முதல் முதல் மலையில் வாழ்ந்தபோதே வாழ்வுத் துறைகளின் மூலங்கள் பலவற்றை அவன் கண்டான். வாழும் வீடு, நீட்டல் முகத்தல் எடுத்தல் முதலிய அளவைகள், நாடோறும் பயன்படும் வாழ்வுப் பொருள்கள் முதலியவற்றின் ஆதி வரலாற்றை ஆராய்ந்தால் அவைகள் மலைபடு பொருள்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது நன்கு விளங்கும்.

மொழியுஞ் சொல்லும் பாட்டும் மலையிலேயே பிறந்தன. ஒலிவழி நின்று பழஞ்சொற்களின் தோற்றத்தை ஆய்ந்தால் உண்மை புலப்படும். இவ்வாராய்ச்சிக்குப் பழம் பழந்தமிழ்ச் சொற்களை - சிறப்பாக நெருங்கிய உறவினரைக் குறிக்குஞ் சொற்களை—பொருளாகக் கொள்வது பொருத்தம்.

மொழி - சொல் - பாட்டு

முதல் முதல் செங்கோல் (அரசு) தோன்றிய இடம் எது? கோல் தோன்றிய இடம் எதுவாயிருத்தல் வேண்டும்? மலையென்று சொல்லலும் வேண்டுமோ? அம்மலையிலேயே வேறு பல நாகரிகத் துறைகளும் வகுக்கப்பட்டன.

செங்கோல்

மலையில் வாழ்ந்த மனிதனுக்கு இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தும் பேறு கிடைத்தது. இயற்கைப் பொருள்களிலேயே அவன்றன் புலன்கள் படிந்து கிடந்தன. அவன் கண்டன கேட்டன உயிர்த்தன உற்றன உண்டன வெல்லாம் இயற்கைப் பொருள்களாகவே யிருந்தன. புலன்களால் இயற்கையைக் கூர்ந்து கூர்ந்து உணரும் வாய்ப்பு அவனுக்கு நேர்ந்தது. இதனால் மண் புனல் தீ காற்று வெளிகளின் இயல், மரஞ் செடி கொடிகளின் இயல், புள்விலங்கு முதலியவற்றின் இயல் முதலியவற்றை அவன் தெரியலானான்.

புலன்களும் இயற்கையும்

மலைவாழ் மனிதனுக்குக் கதிரொளியில் மூழ்கல் நேர்வது இயல்பு. அம்மூழ்கலின் பயனாக அவன் கதிரொளியின் திறங்களையுணரலானான். வானத்தை அண்ணாந்து பார்க்கும் பயிற்சி அவனுக்கு அடிக்கடி கூடியது. அக்கூட்டால் கோள்களின் இயக்கம் அவனுக்குப் புலனாயிற்று. இவ்வாறு

இயற்கைக் கூறுகளின் நுட்பங்களிற் பலவற்றை மலையி விருந்தே மனிதன் தெளிந்து கொண்டான்.

**தன்னியலுங் கடவுளுணர்வும்**

இயற்கைக் கூறுகளின் தன்மைகளை உணர உணர மனிதனுக்குத் தன்னியல் விளங்கிற்று. தன்னியல், அன்பு என்னுங் காதலை யெழுப்பிற்று. இக்காத லெழுச்சி கடவுளுணர்வுக்குத் தோற்றுவாயாக நின்றது. இயற்கையின் ஆராய்ச்சியும் உணர்வும், அதன் உள்ளுறையாகிய இறையுண்மையை உணர்த்தும் இயல்பின என்று சுருங்கச் சொல்கிறேன். இயற்கையோடியைந்த வாழ்வு என்றுதல் ஒருபோது இறையொளியைப் புலப்படுத்தல் ஒருதலை. ஆகவே, கடவுளுணர்விற்கும் பிறப்பிடம் மலையென்பது கருதற்பாலது.

**கடவுள் தோற்றம்**

கடவுள் என்பது எல்லாவற்றிற்குந் தாரகமாய்க் கட்டின்றி அகண்டமாயிருப்பது. அகண்டப் பொருளை நினைத்தலும் அரிது; இத்தகைத்தெனச் சொல்லுதலும் அரிது. அஃது அளவை கடந்து நிற்பது. அளவை கடந்த ஒன்றை எப்படி உணர்வது? இதற்குப் பல வழிகள் பின்னே காணப்பட்டன. அவைகளைச் சமய நூல்களிலும் தத்துவ நூல்களிலுங் காண்க. அவைகளை இங்கே யான் விரிக்கப் போவதில்லை. அகண்டாகாரக் கடவுளின் நினைவைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக நின்ற ஒன்றையே இங்கே குறிக்க விரும்புகிறேன்.

**பரந்து வானளாவ நீண்டு உயர்ந்து ஓங்கி நிற்கும் ஒன்றே, எங்கும் பரந்து நிற்கும் ஒன்றன் நினைவை யூட்ட வல்லதாகும்.** பரந்து வானளாவ நீண்டு உயர்ந்து ஓங்கி உலகிடை நிற்பது எது? **ஓங்கல் என்னும்** மலை என்று எவருங்

கூறுவர். வானளாவ உயர்ந்து ஓங்கி நிற்கும் ஒன்று மனித னுடைய அறிவையும் உயர்த்துந் தன்மையதாகும். உலகியல் நிகழ்ச்சியை நோக்குவோம்.

மனிதனுக்கு ஒன்றைப்பற்றி ஐயப்பாடு நிகழும்போது, அதைக் களைந்துகொள்ள அவன் ஆழ்ந்த சிந்தனையில் அமர் கிறான். அச்சிந்தனை மேல் நோக்கில் செல் கிறதா அல்லது கீழ் நோக்கில் வீழ்கிறதா என்பதை உன்னிப் பாருங்கள். ஒன்றை ஆழ்ந்து சிந்திக்கின்றவன் முகம், வான்நோக்கில் நிற்பதைக் காண்கிறோம். துன்பத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன் நோக்கு யாண்டுச் செல்கிறது? அவன் தலை சாய்த்துக் கீழ்நோக்கி நிற்றலைப் பார்க்கிறோம். என்னை?

மேல் கீழ் நோக்கு

துன்பத்துக்குக் காரணம் அறியாமை. அறியாமை மிக மிக, மனிதன் நோக்கு, கீழ்ப்புறத்தே வீழ்கிறது. கீழாகிய மண் பிரகிருதியின்பாற்பட்டது. பிரகிருதி தன் சகோதர மாகிய அறியாமையைத் தன்பால் ஈர்க்கிறது. மண் மண்ணை ஈர்த்தல் இயல்பு.

பரந்த வான்வெளியோ தீவண்ணமா யிருப்பது. அங்கே உருளுங் கோளங்கள் பெரிதும் அனற்பிழம்பா யிருப்பன. அழற்சோதியின் இயல்பென்னை? இருளை யோட்டுவ தன்றோ? நோக்கு, மேற்பாற் செல்லச் செல்ல, அறியாமை இருள் அகன்று அகன்று, அமைதி உற்று உற்று, அறிவு விளக்கம் பெற்றுக்கொண்டே போகும். ஆகவே, எப்பொழு தும் அறிவு விளக்கத்துக்கு வான் நோக்கு வேண்டற்பாலது. 'உள்ளுவ எல்லாம் உயர்வுள்க' என்றார் வள்ளுவனார்.

அன்பர்களே! ஓங்கலை உன்னுங்கள்; உன்னி அதை நோக்குங்கள்; உங்கள் எண்ணம் மேல் நோக்குகிறதா அல்லது கீழ் நோக்குகிறதா பாருங்கள். உயரிய நோக்கே

கடவுளுணர்வுக்கு அடிப்படை. கடவுளுணர்விற்கும் மலை துணை செய்வதாகிறது.

மலையில் வாழ்ந்து, அங்கே கடவுளுணர்வு பெற்ற மக்கள், பின்னே மற்ற மற்ற நிலங்களில் குடிபுகுந்த போதும், கடவுளுணர்வூட்டக்கூடிய மலையை அவர்கள் மறந்தார்களில்லை. கடவுளைத் தொழுதற்குக் கோயில்களைத் தாங்கள் வாழும் வீடுகள்போல் அவர்கள் கட்டினார்களில்லை. அவர்கள் மலை நினைவூட்டும் உயரிய கோபுரங்கள் அமைத்தே கோயில்கள் கட்டினார்கள். கோபுரங்கள் மலைபோல் உயர் நினைவை யூட்டுவனவாம். உயர் நினைவு கடவுளுணர்விற்கு இன்றியமையாததென்று தெரிகிறது.

**கோபுர நுட்பம்**

எச்சமயப் பழங் கோயில்களிலுங் கோபுரங்களிருத்தல் கண்கூடு. எந்நாட்டவருங் கோயில்களில் கோபுரங்கள் அமைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். மேல் நாட்டுப் பழங்கோயில்களிலுங் கோபுரங்களுண்டு. கீழ் நாட்டுப் பழங் கோயில்களிலுங் கோபுரங்களுண்டு. ஆனால் கோபுரங்களின் அமைப்பு மட்டும் பலவிதமாயிருக்கும். வானோக்கை யுணர்த்துவதொன்றே ஈண்டு வேண்டற்பாலது. மாதாக்கோயில்களிலும், மசூதிகளிலும், சமண பௌத்த சைவ வைணவக் கோயில்களிலும் பலப்பல விதமாக அமைக்கப்பெற்ற கோபுரங்கள் வானோக்கி நிற்றலை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

நமது நாடு கோபுரங்களில் பேர்பெற்றது. அவைகளில் நெஞ்சைக் கவரவல்ல அழகிய ஓவியங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. கோபுரத்தின் உள்ளுறையும், ஓவிய நுண்மையும் பொருளிழந்து நிற்கும் இந்நாளில், சிலர் ஆபாசங்களைக் கோபுரங்களில் பதிக்கிறார்கள். மக்கள் மனோநிலை மாறிவிட்டது! என் செய்வது!

காலதேச வர்த்தமானத்துக் கேற்றவாறு கடவுள் நெறியை ஆங்காங்கே ஓம்பப் போந்த பெரியோர் பலரும் தம் வாழ்வில் பெரும்பொழுதோ அல்லது சிறுபொழுதோ மலையுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அதைக் கருத்திலிருத்திப் பார்ப்பின், கடவுள் நெறிக்கும் மலைக்கும் நெருங்கிய தொடர்பிருத்தல் எளிதில் புலனாகும்.

**பெரியோரும் மலையும்**

முதல் முதல் உலகுக்கு 'அஹிம்ஸா பரமோ தர்மா' என்னும் அருளறத்தை அறிவுறுத்திய விருஷப தேவர் தமது வாழ்வில் பன்முறை மலைத்தொடர்பு பெற்றிருந்ததோடு, இறுதி நாளில் அவர் ஒரு மலை நோக்கியே சென்றார். பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லையென்றும், எவ்வுயிரும் பொதுவென்றும், சீலமே சிறந்ததென்றும் அறநெறியை வலியுறுத்திச் சென்ற கௌதம புத்தர் மலைசூழ்ந்த ஓரிடத்திலேயே பிறந்தார். கௌதமர் பிறப்பதற்கு முன்னர் அவர் அன்னையார் கனவில் ஒரு மலையிடமே தோன்றிற்று. கௌதமர் உண்மையுணர வேண்டிக் காடுகளிலும் மலைகளிலுந் திரிந்தே புத்தரானார். இறுதிநாளில், நிர்வாணம் அடையுந் தறுவாயில், புத்தர் உண்ண நேர்ந்த கிழங்கும் இமயச் சாரலில் விளைந்ததாகும்.

அன்பே கடவுள் என்று உலகுக்கு அருளிப் போந்த இயேசு கிறிஸ்துவும் மலை செறிந்த பதியிலேயே தோன்றினார். அவர் மலைமீதிவர்ந்து நாற்பது நாள் தவங்கிடந்தார். அங்கே அவர் உருமாறப் பெற்றார்; அவர் உடை வெளுத்தது. அவர் மாணக்கர்கட்குத் திருவருள் செய்ததும் மலையிடமே. அவர் மலையில் அருளிய பொன்மொழிகளே சுவிசேஷத்தில் உயிர் நாடியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அவர் திருவுருவமும் மலையிலேயே மறைந்தது. இயேசுவின் வாழ்விற்கும் மலைக்கும் பெருந் தொடர்பிருந்தது.

'ஆண்டவன் ஒருவனே. அவன் பிறப்பிறப் பில்லாத வன்' என்பதை உலகில் நிலைபெறுத்தத் தோன்றிய நபி நாயகத்தின் வாலாற்றிலும் மலைத்தொடர்புண்டு. அவரும் மலைக்குகையில் தெய்வத் திருவருள் பெற்றார்; மலைக் குகையில் நன்மொழிகள் அருளினார்.

பாரத நாட்டு மலைகள் பல முனிவரர் பெயரை அணிந் திருத்தல் கருதற்பாலது. முனிவரர் வாழ்வு பெரிதும் மலை வாழ்வாகவே நடந்தது. முதல் முதல் மலையில் தெய்விகங் கண்ட நாடும் நம் பாரதநாடு என்று கூறல் மிகையாகாது.

நமது அருமைத் தமிழ்நாடு மலையின் மாண்பைக் கண்ட திறத்தை ஈண்டு விரிக்கிற் பெருகும். தமிழர், ஆண்டவனை 'மலை கிழவோன்' என்றும், 'குன்றுதோ றாடுவோன்' என்றும் வழுத்து வதும், தம்மொழி பிறந்தவிடம் மலை யென்று கருதுவதும், இன்னோரன்ன பிறவும் சிறப்பாகக் குறிக்கத் தக்கன.

தமிழரும் மலையும்

தமிழ் நாட்டில் ஒருபோது, ஆண்டவன் உண்மையில் தோன்றிய ஐயப்பாடுகளைக் களைந்து, ஆண்டவன் உண்மையை நிறுவிச் சென்ற பெரியோர் பன்முறை மலைநோக்கியுள்ளனர். அவர்தம் மனமொழி மெய்கள் மலையுடன் கொண்டிருந்த தொடர்பை என்னென்று கூறுவேன்? அத்தொடர்பின் பெருக்கு மலைபோன்றது - கடலனையது - என்று சொல்வேன். அம்மலையையுங் கடலையுந் தேவார திருவாசக நாலாயிரப் பிரபந்தங்களிற் காண்க. அவைகளிற் சிறு துகளையாதல், சிறு திவலையையாதல் எடுத்துக் காட்டவும் போதிய நேரமில்லை. பின்னே இமயம் நிற்கிறது! தாவிபுலாக நியாயம்பற்றி இரண்டொரு குறிப் புக்களை மட்டும் நினைவூட்டிக்கொள்கிறேன்.

அப்பர் சுவாமிகள் வரலாறு உங்கட்குத் தெரியும். அவர் 'நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி - அண்ணலார் சேவடிக்கீழ்' அமர்ந்த வேளையில் அருளிய இறுதிப்பதிகத்தில் 'கழுக்குன்றத் துச்சியாய் கடவுளே' என்று ஒரு சிறந்த மலையுச்சியை நினைந்து கொண்டனர். பெறற்கரிய ஒரு பெருநிலை கூடியபோழ்தும் அப்பர் சுவாமிகள் நினைவில் ஒரு மலையுச்சியே யுற்றது. மலையுச்சியின் மாண்பு அவரனைய பெரியோர்க்கன்றோ தெரியும்? ஈண்டு மலையுச்சி யென்றது புறத்தையுங் குறிக்கும்; அகத்தையுங் குறிக்கும்.

அகமலையுச்சி நண்ணுவதே பேரின்ப நிலையாகும். அதை நிர்வாண மென்றும் சத்திநிபாத மென்றும் பலர் பலவாறு கூறுப. முடிவில் இதைச் சிறிது விளக்குவேன்.

காழிப் பெருமான் மலைப்பதிகளிற் போந்து திருவாய் மலர்ந்த திருப்பதிகங்கள் பல. அவைகளைப் பொருளுணர்ந்து ஓதும்போது, அவைகள் அகத்தில் மலைக் காட்சியை வழங்கி இன்பூட்டுகின்றன.

**மானத மலை**

மலைப்பதிகளின் திருப்பதிகங்களில் மலையைக் காண்டல் சிறப்பன்று. மலையில்லாப் பதிகளின் திருப்பதிகங்களில் மலையைக் காண்டலே சிறப்பு. மலையில்லாப் பதிகளிலும் ஞானசம்பந்தப் பெருமான் மலை நினைவை உண்டாக்குகிறார். அவர் உள்ளம் பிரகிருதி யென்னுங் கீழிற் படிந்ததில்லை; மெய்யறிவை விளக்கவல்ல வானோக்கிலேயே படிந்து கிடந்தது. அவர், தங்கருத்தில் மலைபோன்ற உயர்வை உற்பத்தி செய்கிறார்.

இங்கே மலையில்லாத் திருப்பதிகள் இரண்டு நினைவிற்கு வருகின்றன. ஒன்று திருச்சிற்றம்பலம்; மற்றொன்று திருவையாறு. இவ்விரண்டு திருப்பதிகளின் திருப்பாக்களில் ஒவ்வொன்றையே இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

'செல்வ நெடுமாட சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே'

இத்திருப்பாட்டைப் பண்ணுடன் பாடிப் பாருங்கள்; உங்கள் மனம் எங்கே செல்கிறது? உற்று உணருங்கள். வானோக்கும் மலையில்லாவிடத்திலும், அந்நோக்கை ஞான சம்பந்த வள்ளல் எவ்வாறு கருத்தில் எழுப்பிப் பாட்டில் படைத்துச் செல்கிறார் பாருங்கள்.

பெரியார், 'செல்வம்' என்று துவங்குகிறார். இப் பாட்டில் எல்லாச் செல்வங்களு மிருக்கின்றன. செல்வம் என்னும்போதே நெஞ்சில் பரவலும் உயர்வும் எழுச்சியுந் தோன்றி மகிழ்ச்சி நிரம்புகிறது. அம்மகிழ்ச்சிச் செல்வம் படிப்படியே அகப்புலனை வானோக்கிற் செலுத்துகிறது. எப்படிச் செலுத்துகிறது? 'நெடு', அதற்குமேல் 'மாட', அதற்குமேல் 'சென்று', அதற்குமேல் 'சேண்', அதற்கு மேல் 'ஓங்கி' — ஒவ்வொரு சொல்லுந் தொடர்ந்து தொடர்ந்து, இவர்ந்து இவர்ந்து, நெஞ்சை வானோக்கிலேயே உந்தி நிற்கிறது. இச்சொற்களின்வழி உள்ளம் எவ்வாறு படியேறிப் படியேறி வானோக்கிற் செல்கிறதென்பதைக் கூர்ந்து நோக்குங்கள். சிந்தை எத்துணைத் தூரஞ் செல் கிறது? 'சேணோங்கி' என்று, 'செல்வமதி தோய' என் கிறார். நோக்கு வானிடைப் புகுகிறது. அந்நோக்கு வானளவி லாதல் நின்று விடுகிறதா? இல்லை. அது மேலுந் துருவிச் செல்கிறது. அதனைச் 'செல்வம் உயர்கின்ற செல்வம்' என்கிறார். உயர்வைப் பெருமான் நிகழ்காலத்தில் குறிப் பிடுதல் கருதற்பாலது. சிந்தையும் மனமுஞ் செல்லா

நிலைமைத்தாய ஓர் உயர்வை ஞானசம்பந்தப் பெருமான் அகமுகத்தில் உணர்த்துகிறார்.

செல்வம் படிப்படியாக ஓங்கி ஓங்கி, வானளவில் ஓங்கி, மெய்யறிவில் அமர்ந்து, அமைதியில் திளைக்கிறது. இச் செல்வமன்றோ வான் செல்வம்; விழுச்செல்வம்; அழியாச் செல்வம்? பிறவற்றை உங்கள் ஊகத்துக்கு விடுகிறேன்.

புறவோங்கலில்லா ஓரிடத்தில் அகவோங்கலை ஆளுடைய பிள்ளையார் படைத்து, அதற்குப் படிகளும் அமைத்திருத்தலைக் காணுங்கள். மேலோர் அகக்கண் வானோக்கிலேயே செல்லுதல் இயற்கை. மற்றொரு பாட்டு வருமாறு:—

‘ புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே ’

—திருஞானசம்பந்தர்

இங்கும் புறமலையில்லை. ஞானசம்பந்தர் உள்ளம் ஈண்டும் வான் நோக்கியே செல்கிறது. ‘மழை’ மனத்தை வான் நோக்கிற்குச் செலுத்துகிறது. ‘மரமேறி’ என்பது அதைப் படியேற்றுகிறது. ‘முகில் பார்க்கும்’ என்பது அதை வான் மலையிற் சேர்த்து அமைதியில் நிறுத்துகிறது. வான்மலையை அழகிய பாட்டில் இயற்கை வழி அமைத்திருக்கிறார் ஞானசம்பந்தர். பெரியோர் உள்ளம் கீழ்நோக்கில் வீழாது, வான் நோக்கிற் சென்றுகொண்டே போகும். இப்பெரு நோக்கை உலகில் வழங்கி ஈர்ப்பது எது? மலையன்றோ?

கடவுள் நெறிக்கும் மலைக்குமுள்ள தொடர்பை இன்னும் விரிக்கில் உங்கள் அரிய காலத்தை யானே கொள்ளை கொண்டவனாவேன். இன்னும் இமயம் நோக்கல் வேண்டும்.

**உடல் நலன்**

உயிர் நலத்துக்குக் கடவுள் உணர்வு வாயிலாக மலை துணை நிற்பதோடு, உடல் நலத்துக்கும் அது துணை நிற்கிறது. உடலுயிருக்குரிய நலன்களை மலை ஒருங்கே வழங்குகிறது. வாழ்வுக்கு உயிர் நலன் உடல் நலன் இரண்டுந் தேவை. ஒன்றின்றேல் மற்றொன்றுமில்லை. ஒன்றற்கொன்று இன்றியமையாதது.

'உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'

—திருமூலர்

மலையேறும் ஒருவன் உடற்பயிற்சி செய்கிறவனாகிறான். எல்லாப் பயிற்சிகளினுஞ் சிறந்தது மலையேறுவது. 'இதயத் துடிப்பு', 'இதயப் பரவல்' முதலிய நோய்களால் பீடிக்கப் பட்டவர் மட்டும் மலையேறலாகாது. மலையேறுகிறவன் கதிரொளியிலுங் காற்றிலும் மூழ்கிக்கொண்டே போகிறான். மண்ணுலகும் விண்ணுலகும் விரிந்து விரிந்து தமது பரந்த காட்சியை அவனுக்கு வழங்கா நிற்கின்றன. குறுகிய மண்ணையும் விண்ணையும் பார்த்த மனிதன் விரிந்த மண்ணையும் விண்ணையும் பார்க்கிறவனாகிறான். அவன் மலையில் அருவி நீராடி, மரத்தடியில் அமர்ந்து, இளஞாயிறு உமிழும் ஒளிவிராவிய காற்றைப் பருகுகிறான். கதிரோளியுங் காற்றுங் கலந்த உயிர்ப்பினும் உடலோம்பும் அமிழ்தம் பிறிதொன்றுண்டோ?

'ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வார்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே'

'புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே' —திருமூலர்

பிராணயாமத்துக்கு மலை உரிய இடம்; சாலவும் உரிய இடம். மலைக்காற்றில் தூம்பு தூசுகள் படிவதில்லை. அது நறுங் காற்று. அஃது உடலையோம்பி அமைதி கூட்டும். தூம்பு தூசுகளும் சாக்கடைகளும் வேறுபல நஞ்சுகளும் நிரம்பிய நகரங்களில் பிராணயாமஞ் செய்வதால் நலன் விளைதல் அரிது. நலனுக்குப் பதிலாகத் தீமை விளையினும் விளையும். ஆதலால் பிராணயாமத்துக்கு மலையைக் கோடல் சிறப்பு.

கதிரொளி, காற்று, நீர் முதலிய உணவுகளைக் கொண்ட பின்னைக் கதிரொளியால் கனிந்த பழம் காய் கீரை கிழங்கு முதலியவற்றை உண்ணுதல் நலந்தரும். மலைவாழ் மக்கள் திருவுடையர். அவர்கள் திருவை,

'தேனும் செந்தினை இடிகளும் தீஞ்சுவைக் கனியும்
(ஊனும்) துய்ப்பன; உடுப்பன மரவுரி தழைகள்;
வானுந் தோய்சுனை ஆடுவ; மணிவரை இருப்ப;
எனஞ் சூழ்ந்தகுன் றவர்க்கொரு நல்குர வின்றே'

என்று கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*மலை நலன்கள் இன்னும் பலவுள. அவைகளை இங்கு விரிக்கிற் பெருகும். ஒன்றை மட்டும் சிறப்பாக இங்குக் குறிப்பிட்டு மேற்செல்கிறேன். அவ்வொன்றென்னை? பெரியோர் இருக்கை.*

**பெரியோர் இருக்கை**

*பெரியோர் மலையைத் தமக்குரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றனர்.* அவர் உள்ளொளி ஜோதி விருட்சம் போல் பிரகாசிக்கிறது. *அவ்வொளி மற்ற நிலங்களினும் மின்சாரம்போலப் படர்ந்து உயிர்கட்கு நலஞ்செய்கிறது.*

மலைப் பெரியோர் இயற்கையோ டியைந்து நின்று இறையுண்மை யுணர்ந்தவர். அவர் மூழ்குவது ஏழ்கதிர்; தோய்வது காற்று; ஆடுவது அருவி; புகுவது போதும்பர்; இருப்பது கொழுநிழல்; கிடப்பது பாறை; உயிர்ப்பது நறு மணம். மயிலின் ஆட்டமும் மானின் ஓட்டமும் அவர் காண்டல். அருவியின் முழவும் குயிலின் கீதமும் கிளியின் பாட்டும் வண்டின் முரலும் அவர் கேட்டல். கதிரொளியுங் காற்றுங் கலந்த உயிர்ப்பும், அவ்வுயிர்ப்புறையும் பழமும் அவர் உணவு. திருவருள் அவர் நினைவு. அவர், ஞாயிறு தோன்றும் போது காலைவான் செம்மையையும், ஞாயிறு மறையும்போது அந்திவான் செக்கரையும், இரவுப்போது மீன்கள் மின்னத் திங்கள் நிலவுகாலப் பரந்து பொலிதரும் வான் நீலத்தையும் ஆண்டவன் வடிவாகக் கண்டு கண்டு, தம்மை மறந்து, ஒருமை யின்பத்தில் திளைப்பர். *இப்பெரியோரைத் தாங்கி நிற்பது மலை.*

*இன்னோரன்ன சிறப்புக்கள் பலவற்றையுடையது மலை. அம்மலையையா மறப்பது? மலையை மறந்தா நகரமென்னும் நரகக் குழியில் கிடப்பது? மலையினின்றும் மற்ற நிலங்கள் போந்த பழைய மக்கள், தங்கள் தாயகமாகிய மலையை மறந்தார்களா?*

அவர்கள் மலைநினைவின் பொருட்டுக் கோபுரங்களெழுப்பினார்கள் ; காவியங்க ளெழுதினார்கள் ; ஓவியங்கள் வரைந்தார்கள் ; இவை போன்ற மற்றும் செய்தார்கள். அவ்வளவிலாதல் அவர்கள் நின்றார்களா ? இல்லை. அவர்கள் மலைப்பித்தரானார்கள்.

**மலைப்பித்து**

மலைப்பித்து அவர்களை விட்டகன்றதில்லை. அடிக்கடி அவர்கள் மலை சென்று திரும்பும் முறைகளையுந் துறைகளையுங் கோலினார்கள். அவர்கள் முயற்சியால் மலையில் கோயில்கள் கட்டப்பட்டன ; விழாக்கள் எடுக்கப்பட்டன ; விழாக்கட்கெனத் திருநாட்கள் காணப்பட்டன. மலைச் செலவிற்கென இன்ன பிற வகுக்கப்பட்டன. இவைகட்கெல்லாம் அடிப்படையான நோக்கம் மக்கள் மலையுடன் தொடர்புகொண்டு வாழ்தல் வேண்டுமென்பதே.

**மலைப் பதிகள்**

திருப்பதி, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், பழனி முதலிய மலைப்பதிகள் நினைவிற்கு வருகின்றன. திருப்பதி ஏழு மலைகளை யுடையது. அம்மலைகள் மீதேறி இறங்கினால் எத்துணையோ நலன்கள் விளையும். மலைகளை வலம் வந்து அவைகள்மீதிவர்ந்து இழிதருவதால் எத்துணையோ உயிர் நலன் - உடல் நலன் - விளையும். 'அந்தோ ! பழைய நோக்கம் இப்பொழுது நிலவுகிறதா ? அது வீழ்ந்துபட்டதே. இயற்கைக் கடவுள் குகைகள், காசு பறிக்கும் கள்ளர் குகைகளாகவல்லவோ மாறிவிட்டன ?' என்று உங்களிற் சிலர் கருதல் கூடும். அங்ஙனங் கருத நேர்வது இயல்பே. கருதி ஒதுங்குவதால் பயனில்லை. கள்ளர் வயப்பட்டுள்ள குகைகளை இயற்கைக் கடவுள் குகைகளாக மாற்ற முயலல் வேண்டும். அப்பொறுப்பை யேற்றுக் கடனாற்றல் வேண்டும். அஃதே அறிஞர் கடமை. அக்

கடனாற்றச் சிலர் புகுந்திருக்கிறார். அவர்க்கு எனது வாழ்த்து உரியதாக.

காசு பறிக்குங் கள்ளர் பொருட்டு மலையை மறந்துவிடுவது அறிவுடைமையாகாது. அன்பர்களே! மலையை மறவாதேயுங்கள்; மலைக்கேகுங்கள்; அங்கே கள்ளர்க்கு ஆட்படாதேயுங்கள்; இயற்கை ஆண்டவனுக்கு ஆட்படுங்கள்; குற்றங் களைந்து குணத்தைக் கொள்ளுங்கள்.

நகரமென்னும் நரகத்தில் வாழும் நாம், சிலபோதாவது மலைநோக்கித் திரும்புதல் வேண்டாவா? வேனிற் காலத்தில் சிலர் மலைநோக்குவது உங்கட்குத் தெரியும். அமைதிக்கு மலை வாழ்வு மிகமிக இன்றியமையாதது. மலை, அமைதி வழங்குதற்போலப் பிறிதொன்று வழங்குதல் அரிது. திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்து ஆண்டவனை யுன்னுதற்குப் பெரியோர் மலைத்தொடர்பு கொண்டதை முன்னே சுருங்கச் சொல்லியிருக்கிறேன்.

வாழ்விற்கு அமைதி வேண்டுமா வேண்டாவா? எவ்வமைதி வேண்டும்? புற அமைதிமட்டும் போதாது. அக அமைதியும் வேண்டும். அது, மற்ற அமைதிகளைத் தானே பெறுவிக்கும். அப்பேரமைதியை நகரம் அளிக்குமா?

தற்கால நகரங்கள் ஒருபோதா ஒரு வழியிலா அமைதியைக் கெடுக்கின்றன? என்றும் எல்லா வழியிலும் அவைகள் அமைதியைக் கெடுத்து வருகின்றன. அமைதி இன்னதென்று வாழ்வில் உணராமலே நகர மனிதன் சாகிறான்.

**நகரமும் வாழ்வும்**

நகரம் ஒரு பெருஞ்சந்தை. சந்தை இரைச்சலில் மனிதனுக்கு அமைதியேது?

பலதிற வண்டிகளின் ஓட்டங்கள், பெரும் பெருந் தொழிற்சாலைகளின் ஈட்டங்கள், திரள்திரளான மக்கள்

கூட்டங்கள், அக்கூட்டங்கட்குரிய ஆட்டங்கள், பிழைப்பில்லாத் திண்டாட்டங்கள், உரிமைப் போராட்டங்கள், முதலாளி தொழிலாளிப் போர்கள், இகலின் எழுச்சி - கிளர்ச்சி - புரட்சி - கொலை -- இரத்த ஆறுகள், அடக்குமுறைகள், படையெடுப்புகள், துப்பாக்கி பீரங்கி முழக்கங்கள், பசி பட்டினிகள், பரீட்சைக் கவலைகள், பட்டப்பதவிக் கவலைகள், ஒருவரை யொருவர் வீழ்த்த முயற்சிகள், சூது வாது வஞ்சனைச் சூழ்ச்சிகள், தேர்தல் அலைவுகள், பொய் பொறாமைகள் முதலிய பேய்களும் பூதங்களும் காளிகளும் கூளிகளும் சண்ட தாண்டவமாடும் பாழும் நகரத்திலா அமைதி ? பாழும் நரகத்திலா அமைதி ? *சகோதரிகளே ! சகோதரர்களே ! நகரத்தை விடுங்கள் ; நரகத்தை மறந்து மலையை நினையுங்கள் ; மலையை நோக்குங்கள்.*

*நகரச் சந்தையில் அகப்பட்டு, அடியுண்டு அயர்ந்த மேல்நாட்டுப் புலவர் ஒருவர், ' ஓ ! என்னுருயிரே ! நாம் நம்முடைய மலைக்குப் போவோம் ; நீயும் நானும் ஒருபோது மலையிடத்தவரா யிருந்தோம் ; நீண்ட காலமாக இச்சந்தை யுலகில் தங்கிவிட்டோம் ; நாம் நம்முடைய மலைக்குப் போவோம் ' என்னுங் கருத்துபடப் பாடினார். அப்பாட்டின் ஒரு கூறு வருமாறு :—*

' O my soul, let us go unto our hills'
We were native to them one day, you and I
We have stayed in this market place too long ;
*  *  *  *
O my soul, let us go unto our hills '

—*T. Garrison*

மேல்நாட்டுப் புலவர்கள் மலையின் சிறப்பை மூன்று நூற்றாண்டுகளாகவே உணர்ந்து இன்பந் துய்த்து வருகிறார்கள். சிறப்பாக வோர்ட்ஸ் வொர்த், ரூஸ்ஸியோ, கோயத் முதலிய இயற்கைப் புலவர்க்குப் பின்னரே மேல்நாட்டார் மலையின் நுட்பத்தை உணரலானார். இப்பொழுது மேல்நாட்டார்க்கு மலை பெருவிருந்தாயிருக்கிறது. நம் நாட்டுப் பாவலர்கள் மலையின்பத்தை யுணர்ந்து நுகர்ந்து இன்புற்ற காலம் முப்பது நூற்றாண்டுகளுக்கு மேலுங் கடந்து நிற்கிறது. குறிஞ்சிக்கலி, திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம் முதலியன எந்நாளில் தோன்றின? அந்நாளுக்கு முன்னரே நம் நாட்டுப் புலவர்கள் மலையின்பத்தை நன்கு உணர்ந்து நுகர்ந்தார்கள். அவர்கள் வழிவழி வந்த நாம் இன்று எந்நிலையிலிருக்கிறோம்? மலையின்பம் பிறந்த இடம் மலையின்பத்தை இழந்து கிடக்கிறது! மலைப்பொதுமையை இவ்வளவில் நிறுத்திக்கொள்கிறேன்.

மேல்நாட்டுக் கீழ்நாட்டுப் புலவர்கள்

## மலையரசு

இதுகாறுங் கூறிவந்த மலைப் பொதுவியல்களை மலையரசாகிய இமயத்துக்குஞ் சேர்த்துக்கொள்க. அவைகளை மீட்டும் இமயத்தின்பாற்படுத்திக் கூறவேண்டுவது அநாவசியம். அவைகளிற் சிலவற்றைமட்டுந் தழுவி இமயத்தின் சிறப்புக்கள் சிலவற்றைச் சொல்லப் புகுகிறேன்.

மலைவாழ்வில் உடல் நலன்-உயிர் நலன்-உண்டு எனில், மலையரசின் வாழ்வில் எத்தகை உடல் நலன் - உயிர் நலன் - இருக்குமென்று சொல்லவேண்டுவதில்லை. இமயத்தில் ஆயுளை வளர்க்கவல்ல மூலிகைகளும், மரணத்தைத் தவிர்க்க வல்ல மூலிகைகளும் பல வளர்கின்றன என்று முனிவரர்கள் கூறியுள்ளார்கள். அவைகளுள் ஒன்று இந்நாளில் ஸர் ஜெகதீச

சந்திர போஸால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இமயச் சாரலில் வதிவோர் நீண்ட ஆயுள் பெற்றிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. அவருட் சிலரை இமயத்தின் உச்சி காண முயன்று சென்ற ஐரோப்பியர்கள் கண்டார்கள். இமய மூலிகைகளைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ளுதற்கென்றே ஓர் ஐரோப்பியப் பெண்மணி நம் நாடு நோக்கியிருக்கிறார். இவைகள் யாவும் அணித்தே புதினத்தாள்களில் வந்தனவே. இவைகளை நீங்கள் படித்துமிருக்கலாம்; கேட்டுமிருக்கலாம்.

## ஆறுகள்

இமயத்தில், பெரிய பெரிய ஆறுகள் தோன்றி இழி தருகின்றன. அத் தெய்விக நதிகளின் சிறப்பை என்னொரு நாவால் எங்ஙனஞ் சொல்வேன்? அவைகள், கம்பன் பாக்களிலும் பரப்புடையன; ஆழமுடையன; அழகுடையன. அகன்று பரந்து நிரம்பித் ததும்பியோடும் பெருக்கில் தெய்விகமன்றோ தோன்றுகிறது? சிந்துவென்ன, கங்கையென்ன, பிரமபுத்திராவென்ன - இவ்வாறுகள் - இக்கடலாறுகள் - புலன்களைக் கவ்வுவனவல்லவோ? இப்பேரியாறுகள் எத்துணை எத்துணைக் கோடி கோடி உயிர்கட்கு நலஞ்செய்கின்றன! இவ்வாறுகளை ஈன்ற இமயவல்லியின் சிறப்பென்னே! என்னே!

## பெரியோர்கள்

இமயம், பெரியோர்களிருப்புக்குப் பேர் பெற்றது; மெய்யுணர்விற்கு ஊற்றுக்களனாயிருப்பது. இமயக் காற்றிலே இறையொளி வீசுகிறது. மெய்யுணர்விற்கு இமயச் சேர்க்கை இன்றியமையாதது. 'தத்துவத்துக்கு இமயம்' என்னும் ஒரு வழக்கேயிருக்கிறது. இமயம் போந்து மெய்யுணர்வு பெற்றோர் பலர். இக்கால மக்களில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் பிளவட்ஸ்கி அம்மையாரும் சாது சுந்தர

சிங்குமாவர். இவர்கள் வரலாறுகளை ஆராய்க. ஆராய்ந்தால் இவர்கள் திருவருட்செல்வம் பெற்றஇடம் இமயம் என்று உணர்வீர்கள். இவர்கள் மொழிகளிலும் இமயத்தின் மாண்பு புலனாகும்.

## கடவுள் காட்சி

அகண்டாகாரக் கடவுள் நினைவைப் பரந்து வானளாவிய மலை உண்டாக்குகிறது என்று மேலே சொல்லியுள்ளேன். இமயமோ மலையரசு! மலையரசின் அகலமென்னை? நீளமென்னை? உயரமென்னை? அவ்வளவைகள் காட்சிக்கெட்டாதன. அப்பெரிய மலையை நோக்கும்போது, அது கடவுள் நினைவை யூட்டியே தீரும். இமயத்தினும் பெரியதொன்று இவ்வுலகிலில்லை. பெரிய வொன்று பெரிய வொன்றன் நினைவூட்டுதல் இயல்பே. இமயத்தினின்றும் முதல் முதல் கடவுள் உணர்வு தோன்றி யிருத்தல் வேண்டும்.

கடவுள் உணர்வூட்டும் இமயத்தைக் கடவுள் உருவாக இயற்கைப் புலவர்கள் வருணித்திருப்பார்கள். அவ்வருணனையில் அடங்கிய உறுப்புக்கள் பின்னே கடவுள் உறுப்புக்களாகக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

கடவுள் ஒருநாமம் ஓருருவமில்லாத ஒன்று. அதற்குப் பலநாமம் பலவுருவம் புலவர்களால் அணி செய்யப்பட்டன. அந்நாமங்களுள் சிவநாமமும் சிவவுருவமும் மிகவுந் தொன்மையன.

**சிவமும் இமயமும்**

சிவ வழிபாடு ஒருபோது உலக முழுவதும் பரவி யிருந்தது. பூபதனங்களிலுஞ் சுரங்கங்களிலுஞ் சிற்சில சமயங்களில் சிவவுருவங்கள் அகப்படுகின்றன. நீலநதிக்கரையிலும், பால்டிக் கடலோரத்திலும், வேறு பல விடங்களிலுஞ் சிவலிங்கச் சிதைவுகள் காணப்படுகின்றனவென்று சரித்திரக்

மறைமலையடிகள் நூல்நி... MARAIMALAI ADIGAL

காரர் சொல்கின்றனர். பண்டை மக்கள் பல இடங்களில் தீயை வழிபட்டதும், குழியில் எரியோம்பி வழிபட்டதும், ஞாயிற்றை வழிபட்டதும் ஈண்டுக் கருதற்பாலன. இன்னோரன்னபிற, சிவந்த சிவ வழிபாட்டின் தொன்மையைக் குறிப்பன. ஒருபோது உலக முழுவதும் பரவியிருந்த ஒரு வழிபாட்டிற்குக் கருவியாக நின்ற சிவ வடிவத்தை ஊன்றி ஆய்ந்தால், அதனை இமயத்தோற்றத்தின் ஓர் அழகிய ஓவியம் என்று கூறுதற்கு இடனுண்டாகும்.

இயற்கை இறை யுடல். அவ்வுடலுக்கு அழகிய உறுப்புக்கள் அமைத்து அதனை ஓவியமாக்கி வழிபடுவது தவறாகாது. அழகுக் கடவுளிடம் உயிர்களின் உணர்வு செல்லுதற்கு ஓவியம் ஒரு பாலம்போலத் துணைசெய்வது. 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலில் இந்நுட்பத்தை ஒல்லும் வகை விளக்கியிருக்கிறேன்.

இக்கூட்டத்தில் வட இந்தியா போந்து, இமயக் காட்சியை நேரே கண்டவரிருக்கலாம்; இமயமலையைப்பற்றிய காவியங்கள், கதைகள், கட்டுரைகள் படித்தவரிருக்கலாம்; அம்மலைப் படத்தையாதல் பார்த்தவரிருக்கலாம். எம்முறையிலாதல் இமயத்தை உணர்ந்தவர் ஈண்டுக் குழுமியுள்ளாரென்று கருதுகிறேன்.

அன்பர்களே! இமயத்தை நினைந்துகொள்ளுங்கள்; சேய்மையில் நின்று அதை நோக்குவதுபோல் எண்ணிக் கொள்ளுங்கள்; அது சிவவுரு வழங்குவதைக் கவனியுங்கள்.

இமயம் மூன்று கூறுகளைக் கொண்டிருக்கிறது. ஒன்று பசுமை; மற்றொன்று கருமை; இன்னொன்று வெண்மை. பசுமை, அடியில் துவங்கி இடப்பா லொதுங்குவதுபோ லெழுந்து, அமர்ந்துள்ள காடுகளின் செறிவு; கருமை, உடலின் குறுக்கே பதிந்துள்ள பாறைகளின் மிடைவு; வெண்மை, உச்சியிலுள்ள பனிக்கூடல்.

அடி துவங்கி, இடமொதுங்கிப் பச்சைப் பசுங்கடலின் பொங்கலே போன்றெழுந்து, அமர்ந்துள்ள பச்சையழகு, பண்டை இயற்கைப் புலவர்கட்கு எக் காட்சி தந்திருக்கும்? கரும் பாறைகளின் மிடைவு அப்பாவலர்கட்கு எத்தோற்றத்தை நல்கியிருக்கும்? பனிக்கூடல் தன்னில் கதிரொளி துருவிப் பாய்ந்து படரும் வேளையில் (அவ்வொளி) எவ்வண்ணத்தை அவ்வறிஞர்கட்குப் புலப்படுத்தியிருக்கும்? பனிக்கோட்டி லொளிரும் நீலம் அக்கூர்த்த மதியினர்க்கு எவ்வெண்ண மூட்டியிருக்கும்? செம்மையோங்கலுக்கும் பசுமையோங்க லுக்கும் இடையில் புகும் ஞாயிற்றொளி தாக்கும் செங்கோடு அவர்கட்கு எவ்வாறு தோன்றியிருக்கும்? இவ்வழியில் இயற்கைப் பாவலர்கள் வாயிலாக முறையே பெண்ணொரு பாகம்; கரியுரி, பொன்னார்மேனி, நீலகண்டம், செஞ்சேய் பிறந்திருத்தல் வேண்டும்.

**சிவவடிவத் தோற்றம்**

இமய ஓங்கலின் இருபுறத்திலுந் திரண்டு திரண்டு நீண்டு நீண்டு வளைந்து வளைந்துள்ள தொடர்களையும், அவை களின் நுனிகளிலுள்ள சிதைந்த திரட்சிகளையும் முறையே எட்டுக் கைகளாகவும், அவைகளிலுள்ள பொருள்களாகவும் இயற்கைப் புலவர்கள் கொண்டிருப்பார்கள். இமயத்தின் பின்னே தலையினின்றும் பாளம் பாளமாக இடைவிட்டுப் பிளவுண்டு, சுருண்டு உருண்டு திரண்டு முறுக்கேறிய வடங்கள்போல வீழ்ந்துள்ள பாறைத் தொங்கல்களைத் தாழ் சடைகளாக அப்புலவர்கள் கருதியிருப்பார்கள். மலையரசின் உச்சியில் சூழ்ந்து துதைந்துள்ள மேக மண்டலங்களைக் கங்கை நீர்த் தேக்கமாக அவ்வறிஞர்கள் எண்ணியிருப் பார்கள். முடிமீது தவழும் அந்திவான் பிறையை இறைவன் முடிப்பிறையாக அவர்கள் உணர்ந்திருப்பார்கள். இவ்வாறு இமயத்தின் உறுப்புக்கள் பல சிவவுருவின் உறுப்புக்

களாகப் பண்டைப் புலவர்கட்குத் தோன்றியிருக்கும். இமய மளித்த சிவவுருவம் (சிவமன்று) பின்னே காவியங்களிலும் ஓவியங்களிலும் பிறவற்றிலும் பற்பல வழியில் கூட்டல் குறைத்தலுற்று, ஒழுங்கு பெற்றிருத்தல் வேண்டும். நாளடைவில் பலர் 'இமய வுருவம் சிவவுருவம்' என்பதை மறந்தும் பலதிறக் கதைகளெழுதியிருக்கலாம்.

இங்கே சிலர்க்கு ஐயப்பாடுகள் நிகழ்தல் கூடும். 'என்ன! இமயமென்னும் ஒரு மலையிலிருந்தா சிவபிரான் வடிவம் பிறந்திருக்கும்' என்னும் வியப்புந் தோன்றலாம். இது பற்றித் தோன்றும் ஐயப்பாடுகளைக் களைதற்கு இஃது இடமுமன்று; நேரமுமில்லை; எடுத்தபொருளும் முடியாது. ஆயினுஞ் சுருங்கச் சில கூறுகிறேன்.

சிவம் என்றுமுள்ளது; அநாதி. அஃது ஒன்றினின்றுந் தோன்றுவதுமில்லை; ஒன்றில் ஒடுங்குவதுமில்லை. அது தோற்றக் கேடுகளில்லாதது; எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பேரறிவு அதற்கு உடல் இயற்கை. இயற்கை வாயிலாக அதனிருப்பையுணர்தல் வேண்டும்.

இயற்கைக் கூறுகளில் அரசுபோன்றது மலை. இமயமோ மலையரசு. மாற்றமனங் கடந்தொளிரும் அகண்டாகார ஒன்றை, மாற்ற மனமுடைய உயிர்கட்கு நினைவூட்டவல்ல இயற்கையரசின் அரசாகவுள்ள இமயத்தினுஞ் சிறந்த ஒன்று இவ்வுலகில் இருக்குங்கொல்? உலகிலுள்ள பெரிய ஒன்று அதனினும் பெரிய ஒன்றை யுணர்த்துவதாகும். ஆதலால், சிவவுணர்விற்கு இமயமலை கருவியாக நின்றிருக்குமென்று கோடல் தவறாகாது.

மின்சாரம் யாண்டுமிருப்பினும் அது தொழிற்படுமிடத்திலேயே விளங்கித் தோன்றுகிறது. அதுபோல யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள சிவம் அல்லது பேரறிவு, அறியாமை விலகுமிடத்தில் விளங்கித் தோன்றும் இயல்பினது.

வான் நோக்கு அறியாமையை நீக்கி அறிவை விளக்குவ தென்பதும், அதுபற்றியே பெரியோர் மலைவாழ்வைக் கொள் கிறார் என்பதும் மேலே ஒருவாறு விளக்கப்பட்டிருக்கின் றன. வான்நோக்கை வழங்குவதில் இமயம் தலையாயது என்று அடிக்கடி சொல்லவேண்டுவதில்லை. அந்நோக்கு அறியாமையை விலக்குவது. அறியாமை விலகும்போது தோன்ற வேண்டுவது எது ?

'பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கா ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கா ணங்களே'

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே'

—திருமந்திரம்

வானோக்கு இரண்டு விதம். புறவழி நிகழும் வானோக்கு ஒன்று ; அகவழி நிகழும் வானோக்கு மற் றொன்று. இவ்விரண்டையும் முடிவில் சிறிதாதல் விளக்க எண்ணியிருக்கிறேன்.

யாண்டுமுள்ள சிவம் இமயவானோக்கில் நன்கு விளங் கித் தோன்றுகிறது. அத்தோற்றத்துக்கு நிலைக்களனாக நிற்கும் இமயவடிவைச் சிவவடிவாகக் கொள்வதால் இழி வென்னை ? 'கனலைக் காற்றைக் கனகடலைக் குலவரையைக் கலந்து நின்ற பெரியானை' என்பதுபோன்ற ஆன்றோர் அநுபவ மொழிகளை நோக்குக.

ஒன்றை ஒருவன் ஓவியமாக வரைகிறான். அவ்வோவி யம் பல நிறங்களால் ஆக்கப்படுகிறது. பன்னிறத்தால்

ஆக்கப்பெற்ற ஓவியம் நிறமா என்பது கேள்வி. நிறத்

ஓவிய நுட்பம்

தின் வழிக் கலைஞன் தன் கருத்திலுள்ள உருவையிறக்குகிறான். கருத்தில் உருவை ஒழுங்குபடுத்துவது அறிவு. ஆகவே ஓவியமென்பது நிறத்தின் வாயிலாக வெளிப்படுங் கலைஞன் அறிவாகும். ஓவிய நிலையில் அதை எவரும் நிறமென்று கூறார். ஓவியங் குலைந்ததும் அது நிறமென்னும் பெயர்பெறுகிறது.

ஆண்டு ஓவியமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த கலை, கலைஞன் அறிவிற் கலக்கிறது. இவ்வாறே ஒவ்வோர் உருவமும் உருவ நிலையில், அவ்வுரு மூலத்தின் பெயராலும், அவ்வுருவ அழிவில் அதை உருப்படுத்தற்குக் கருவியாக நின்ற ஒன்றன் பெயராலும் அழைக்கப்படுதல் கண்கூடு. இந்நுட்பத்தைத் தெளிவுபடுத்துவனவே 'பொன்னை மறைத்தது', 'மரத்தை மறைத்தது' என்னும் *இரண்டு திருமந்திரச் செய்யுள்களும்.

இமயம், கல் முதலிய பொருள்களால் ஆக்கப்பட்ட மலையாகவும் நிற்கிறது; சிவமாகவும் நிற்கிறது. ஆதலால் 'ஒரு மலையா சிவ உருவம்' என்று எவரும் மலைவுற வேண்டுவதில்லை. உண்மையைக் கூர்ந்து நோக்கின் நுண்மை புலப்படும்.

இயற்கைப் புலவர்கள், இயற்கை வாயிலாக இறையையுணர்வார்கள். இத்தன்மையதேன நினைந்து சொல்லோணு ஒன்றை - எழுதோணு ஒன்றை - இயற்கை வாயிலாக நினைந்து சொல்வதும், இயற்கைத் துணையால் எழுதுவதும் அப்புலவர்கள் வழக்கம். அவர்கள் சொல்லும் எழுத்தும் இயற்கை. அச்சொல்லின் பொருளும் எழுத்தின் பொருளும் இறை. ஆகவே இயற்கை மலையாசாம் இமயத்தின் வழியே இறையுணர்வு புலவர்கட்குப் பிறந்திருக்கலாம்.

இமயத்தினின்றும் பிறந்த ஒருருவின் நுட்பங்களும், தத்துவங்களும், பிறவும் பின்னே யோகஞான நெறிகளானும், அவைகளைப்பற்றிய கலைகளானும் விளங்கலாயின. சிவவுருவம் ஒரு யோகியின் உருவம் போன்றது. அமலயோகத்தில் ஈடுபட்ட ஒருவன் அடையவேண்டிய நிலை சிவவடிவிலிருக்கிறது. அமலயோகி உண்ணும் அமிர்தம், அது தங்குங் கலசம், அஃதொழுக்குந் தாரை முதலியன, மதி கங்கை சடை முதலியவற்றைக் குறிப்பன. விளக்கம் யோக நூல்களிற் காண்க. வேதாந்த சித்தாந்த ஞான நூல்கள் சிவவடிவின் தத்துவ நுட்பங்களைத் தெரிவிக்கின்றன.

யோகமும் தத்துவமும்

சிவவுருவைப் பற்றிய ஐயப்பாடுகள் இளமையில் எனக்குப் பன்முகமாகத் தோன்றின. அவைகளிற் சில யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களெழுதிய 'சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்' என்னும் நூலால் ஒருவாறு களையப்பட்டன. பின்னே அவைகளைப் பெரிதும் போக்கிய நூல் திருமூலரருளிய திருமந்திரம். இப்பொழுது எனக்குச் சிவவடிவம், பாட்டுக்குரிய அழகாகவும், யோக மூலமாகவும், அகண்ட தற்பரசிவத்தை யுணர்த்தவல்ல இயல்புகளைக் கொண்ட தத்துவங்கட்கு நிலைக்களனாகவும் விளங்குகிறது. இவைகட்கெல்லாம் பருமையுலகில் தோற்றுவாயாக நிற்பது இமயமலை.

இமயத்தில் பெரியோர்களிருக்கிறார்களென்று மேலே சொல்லியிருக்கிறேன். அவர்களில் இமயம் போன்றவர் ஒருவரிருக்கிறார். அவரைப் பற்றிப் பின்னுங் கூறுவன். அவரே இமயத்தின் உயிர். அவர்தம் உள்ளொளி - சிவசோதி - இமயத்தைத் தன் வயப்படுத்தியிருக்கிறது. அவ்வொளி நாடியே அறிஞர் ஆண்டுப் போதருகின்றனர். அப்பேரொளி

இமயப் பெரியோர்

தன்னையுடையவரின் வடிவாக இமயத்தின் வழிப் பண்டை இயற்கைப் புலவர்கட்குப் பொருளாகியு மிருக்கலாம்.

சிவபிரானுக்கும் இமயத்துக்குமுள்ள தொடர்பு பல பட விரிந்து கிடக்கிறது. அத்தொடர்புகளைப் புராணங்கள் பல கதைகளாகப் புகல்கின்றன. நுட்பங்களைக் கதைகளாகச் சொல்வது புராண மரபு. சிவபிரான் மலையரையன் பொற்பாவையை மணந்தார் என்று புராணங் கூறுவதும் ஈண்டு உன்னற்பாலது. பல வழியிலும் மலைத்தொடர்பு காட்டப்படுகிறது.

அன்பர்கள் ஆண்டவனைப் போற்றும்போது, இயற்கைக் கூறுகள் பலவற்றை அவர்கள் உவமை செய்வார்கள்.

மலையுவமை

அவைகளுள், அன்பர்கள் உள்ளம் பெரிதும் மலையிலேயே ஈடுபடும். அதற்குக் காரணமென்னை ? காரணம் பல கூறலாம். கடவுளுணர்வும் நினைவும் வடிவும் முதல் முதல் மலையினின்றும் பிறந்தமையே சிறந்த காரணமாகும். அம்மலைமொழிகள் மலைகள் போலப் பெருகி நிற்கின்றன. 'குன்றே யனையாய்' என்றும், 'ஆனந்த மலையே' என்றும் பெரியோர்கள் மலையை நினைந்து கொள்வதைக் கருதிப் பாருங்கள்.

## காற்றருகு மலை

'போகப் போகக் காற்றருகு மலைக்கா இவ்வளவு சிறப்பு' என்று சிலர் கருதலாம். இமயத்தின்மீது இவர்ந்து செல்லச் செல்லக் காற்றருகுதல் உண்மையே. அதனால் இழுக்கொன்றுமில்லை. அதன்கணுள்ள நுட்பமே இமயச் சிறப்புக்களில் தலையாயது என்றுங் கூறலாம்.

இமயம் மூன்று கூறுடையது என்றும், அவை பசுங்காடு, கரும்பாறை, வெண்பனி என்பன என்றும் மேலே சொல்லியிருக்கிறேன். இமயத்தின் உயரம் இருபத்தொன்பதாயிரம்

அடி. ஒன்று முதல் ஏறக்குறைய எண்ணுயிரம் அடிவரை பசுங்காடு. இவ்வெண்ணுயிரம் அடிமுதல் ஏறக்குறைய பதிஞுயிரம் அடிவரை கரும்பாறை. மிகுதி வெண்பனிக்கூடல்.

இரண்டாம் பகுதிவரை காற்றுக் கடவுளின் திருவருள் பெரிதுமுண்டு. அங்கிருந்து ஏறக்குறைய நாலாயிரம் அடிவரை அத்திருவருள் அப்படியும் இப்படியும் நிகழும். அதற்குமேல் காற்றருகல் துவங்குகிறது. அப்பகுதியில் காற்று நிரம்பிய பையினின்றுங் காற்றுப் பெற்றுப் போதல் வேண்டும். இவ்விவரங்கள் யாவும், இமய உச்சி காண முயன்று திரும்பிய ஐரோப்பியர்களால் நன்கு விளக்கிச் சொல்லப்படுகின்றன.

வானிற் பறந்து செல்லும் விமானிகளின் அநுபவங்கள் பல கிடைத்திருக்கின்றன. ஓர் ஆகாய விமானியின் அநுபவம் 'லண்டன் டைம்ஸி'ல் ஒருபோது வெளியிடப்பட்டிருந்தது. பதிஞுயிரம் அடிவரைக் காற்றுப்பைத் துணை வேண்டுவதில்லை யென்றும், அதற்குமேல் அத்துணை, படிப்படியாக வேண்டப்படுகிறதென்றும், இல்லையேல் உணர்வழியப் பெறுகிறதென்றும் அவ்விமானி கூறியுள்ளார். அங்கு அவரெதிரிலிருந்த டைப்ரைட்டரில் பொறிக்கப் பெற்றிருந்த எழுத்துக்களைக் கூட்டிப் படித்தல் அவரால் முடியவில்லையாம். மொழிக்குரிய எழுத்துக்கள் என்னும் உணர்வே ஆண்டு அவருக்குத் தோன்றவில்லையாம். கீழே இறங்க இறங்கப் பழைய நல்லுணர்வு பிறக்கிறதென்றும், அப்பொழுது எழுத்துக்களைக் கூட்டிப் படித்துப் பொருளுணரும் நிலை நேர்கிறதென்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

*ஆகாய விமானியின் அநுபவம்*

பதினுயிரம் அடிக்குமேலுள்ள நிலை அப்படியும் இப்படியுமிருப்பதாகும். அதற்குமேற்செல்லின் உணர்வழியும்

நிலை நேரும்போதும்! 'காயமே இது பொய்யடா - காற்றடைந்த பையடா' என்றார் ஒருவர்.

இமயத்தின் பசுமை - கருமை கடந்தொளிரும் வெண்மையிலேயே, காற்று, பருமையில் வேண்டப்படுகிறது. ஆண்டிருந்தே இமயம் காற்றருகு மலை என்னும் பெயர் பெறுகிறது. இயற்கை மாறுமிடம் அதுவே. அம் மாற்றத்தின் நுட்பம் கூர்ந்து உன்னற்பாலதே.

இமயத்தின் காற்றருகு வெண்மைப் பகுதியே வெள்ளி மலையென்றுங் கயிலாயமென்றும் வழங்கப்பெற்று வருகிறது. கயிலாய மென்பது தத்வார்த்தமுடைய ஒன்று. கயிலாயம் புறத்திலிருப்பது போல அகத்திலுமிருக்கிறது.

அகப்புறக் கயிலாயம்

கயிலாயம் இமயத்தில் இருப்பதுபோல நம்மிடத்திலும் இருக்கிறது. அகநோக்கிலிருந்து நம்மை ஆராயின், நாமும் ஓர் இமயமாயிருத்தல் உணரலாம். இமயம் முக்கூறுடைத்தாயிருப்பதை யொப்ப நாமும் முக்கூறுடையவராயிருக்கிறோம். பசுமை கருமை வெண்மையென்னும் மூன்றும் இமயத்திலுமுண்டு; நம்மாட்டுமுண்டு.

பசுமை மாயையைக் குறிப்பது. கருமை ஆணவத்தைக் குறிப்பது. கர்மம் மாயையினின்றும் ஆணவக் கூட்டுறவால் பிறப்பதொன்றாகலின், அதனைப் பசுங்கருமையிற் சேர்த்துவிடலாம்.

இமயத்தின் பசுமைப் பகுதியாய காட்டில் என்ன இருக்கும்? பொல்லா விலங்குகளல்லவோ இருக்கும்? நம்பாலுள்ள மாயா அடவியிலும் பொல்லா விலங்கியல்புகளிருக்கின்றன. இமயத்தின் பசுங்காட்டுப் பகுதியைக் கடந்ததும் கரும் பாறைப் பகுதி தோன்றுகிறது. நாமும் மாயையைக் கடந்தால், ஆணவப் பாறையிருத்தல் அறிவோம். இமயப் பாறையில் கழுகு முதலிய வன்பறவைகளிருக்

கின்றன. நம்மிடத்தும் அப்பறவையியல்புகளிருக்கின்றன. இமயத்தின் கரும்பகுதியைக் கடந்து சென்றால் வெண்மை யொளி புலனாகிறது. நாமும் ஆணவப் பாறையைக் கடந்து சென்றால் மெய்யறி வொளி விளங்கப் பெறுகிறோம். இம யத்தின் வெள்ளொளி புறக்கயிலாயம். இங்கே மெய்யறி வொளி அகக்கயிலாயம். இதுவே நிர்வாணமென்பது. இதனைச் சத்திநிபாதமென்று சைவநூல்கள் கூறும். இதற்கு மற்றவர் மற்ற மற்ற குறியீடுகள் புனைந்துள்ளனர். எல்லாம் ஒரு கருத்துடையனவேயாகும்.

இயேசு பெருமான் மலைமீதிவர்ந்து வெண்மை எய்தி யதை இங்கே நினைவூட்டிக் கொள்ளுங்கள். அவரெய்திய வெண்மை எது ? மெய்யறிவு விளக்கம் - நிர்வாணம் - சத்தி நிபாதம் அல்லது கயிலாயப்பேறு என்பதே.

பெரியோர் மலைப்படி ஏறுவதென்பது அக முகத்தில் மாயா காரியங்களாகவுள்ள தத்துவப்படிகளை ஏறுவதென்க. இதனைக் கண்ணப்பர் காளத்திமலை ஏறியவிடத்தில் சேக் கிழார் நன்கு விளக்குகிறார்.

> ‘ நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத் தாமும்
> மேனுதத் துவங்க ளென்னும் பெருகசோ பான மேறி
> ஆணையாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
> நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போதில் ’

இப்பெரிய புராணப் பாட்டின் பொருள் நுட்பத்தை உன்னி உன்னி உண்மையுணர்க.

இனி எடுத்த பொருள்மீது செல்வோம். இமயத்தில் இயற்கை மாறுமிடத்தில் கருத்தைச் செலுத்துங்கள். கருமை கடந்து வெண்மை துவங்குமிடத்தில் இயற்கை மாற்றமுறுகிறது ; அதாவது காற்று அருகுகிறதென்பது.

அகத்திலும் இம்மாற்றம் நிகழ்கிறது. ஆணவம் ஒடுங்கி மெய்யறிவொளி தோன்றும் இடத்திலேயே அசத் இஃதென்பதும், சத் இஃதென்பதும உணர்விலுறுகின்றன. அசத்தும் சத்தும் பிரியுமிடமிதுவே. இந்நிலையை 'யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்' என்றார் மெய்கண்டார்; 'முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்' என்றார் ஔவையார். இச்சூந்யமே நிர்வாணமென்பது. வெட்ட வெளியில் என்ன இருக்கும்?

அகத்தில் சத்தும் அசத்தும் பிரிவுறுமிடமே புறத்தில் இமயத்தில் காற்றுப்பெருக்கும் காற்றுச் சுருக்கும் பிரிவுறுமிடமாகும். அசத்தை மனிதன் சத்தென்று கருதிக்கொண்டிருக்குமட்டும் அவனுக்குப் பிரகிருதித் தொடர்பிருக்கும். பிரகிருதி உடலுக்குப் பருமைக் காற்று இன்றியமையாதது. மகன் அசத்தின் தன்மையுணர்ந்து அதனின்றும் நீங்கிச் சத்துணர்வு பெற்றதும், அவன் பிரகிருதியினின்றும் விடுதலையடைகிறான். பிரகிருதி உடலுணர்வு ஒடுங்குமிடத்தில் பிரகிருதியின்பாற்பட்ட பருமைக் காற்று வேண்டுவதில்லை. ஆகவே, இமயத்தின் வெண்மையினிடம் பிரகிருதி மாயா உடலுணர்வினர் ஏகும்போது அவர்க்கின்றியமையாத காற்றுப் பேறு போதிய அளவின்றி அவர் தயங்குகின்றார்.

**இமய உச்சி காண்டல்**

இமயத்தின் உச்சி காண நம்போன்றவரால் இயலாதோவெனில், மிக அரிதில், அஃதும் ஒருவாறு இயலுமென்று கூறலாகும். மேல்நாட்டறிஞர் சிலர் இமயத்தின் உச்சிகாண முயன்று வருவதும், அவருள் ஒரு கூட்டத்தார் இருபத்தாறாயிரம் அடிவரைச் சென்றதும் உங்கட்குத் தெரியும். அவர் காற்றருகியுள்ள இடங்களில் எப்படிச் சென்றனர்? தற்கால முறைப்படி பைகளில் காற்றை நிரப்பி, அவைகளை உடன்கொண்டு சென்றனர். இது செயற்கை முறை;

இயற்கை முறையாகாது. ஆயினும் அவர்தம் ஊக்கமும் முயற்சியும் பாராட்டற்பாலனவே.

பனிச் செறிவில் செயற்கை முறையில் காற்றை உட்கொண்டு காற்றருகியுள்ள இடத்தில் ஏறிச்செல்லல் எத்துணை அருமை? ஏமாந்தால் உயிர் போய்விடும்! சிலர் இடையிடை உயிரையும் இழந்தனர். உயிரையும் பொருட்படுத்தாது, ஏற்ற கருமத்தில் கண்ணுயிருந்து உழைத்து வருதலைத் தற்கால மேல்நாட்டார் சிறந்த அறமாகக் கொண்டிருத்தல் கவனிக்கத்தக்கது. விடாமுயற்சிக்கு எப்பொழுதும் வெற்றியுண்டு.

எந்நாட்டிற் பிறந்தவர் எந்நாட்டு மலையுச்சி காண எத்துணை அரிய முயற்சியில் தலைப்படுகிறார்! இமய நாட்டிற் பிறந்த நாம் இமயத்தின் உச்சி காண முயல்கிறோமா? எண்ணமாதல் கொள்கிறோமா? இல்லையே! ஆனால் பண்டைப் பெருமையைப் பாராட்டுமளவில் உள்ளநிறை கொள்கிறோம். பண்டைப் பேச்சில் மேல்நாட்டாரை நாம் எளிதில் வென்றுவிடுகிறோம்!

பண்டை மூதறிஞர் இமயத்தின் பல பாகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாரென்று தெரிகிறது. அவர் எழுதியுள்ள காவியங்கள், யோக நூல்கள், ஓவியங்கள் முதலியன சான்றுகளாக நிற்கின்றன. ஆனால் இமயச் செலவிற்கு அவர் கொண்ட முறை வேறு. அஃது இயற்கை முறை. இப்பொழுது நமக்கு அம்முறையுந் தெரியாது தற்கால முறையுந் தெரியாது. நம்மினுந் தற்கால மேல்நாட்டார் விழுமியோர் என்பதில் என்ன ஐயம்?

இமயத்தின் உச்சி காண்பதில் என்றுதல் மேல்நாட்டறிஞர் வெற்றியுறுதல் ஒருதலை. அவ்வெற்றி நாளே மேல்நாட்டின் விடுதலை நாள்; உலகின் விடுதலை நாள். அந்நாளே மேல்நாட்டில் ரிஷிகள் தோன்றும் நாள். இமயத்தின்

உச்சியை இரண்டொருவர் அரிதில் முயன்று கண்டபின்னைப் பலர்க்கு அதைக் காணும் வேட்கை முறுகியெழும். அவ் வேட்கை செயற்கை முறையில் முற்றுறாது. ஏன்? அடிக்கடி பலர் போதல் வேண்டுமன்றோ? அதற்குப் புதியதொரு முறை காணப்பெறும் அவசியம் நேரும். அம்முறை நம் முன்னோர் கண்ட இயற்கை முறையாக நேரலாம். அவ் வியற்கை முறை மேல்நாட்டுணர்வில் படிதற்கு, அந்நாட்டிற்றோன்றி, நம் நாடு போந்து, இமயத்தில் தங்கி, உள்ளொளி பெற்ற பிளவட்ஸ்கி அம்மையார் கால்கொண்டனர். இப்பொழுது ஸர் ஓலிவர் லாட்ஜ் உள்ளிட்ட சிலரால் சுவர்கள் எழுப்பப்படுகின்றன.

ஸர் ஓலிவர் லாட்ஜ் பெரிய பூத பௌதிக சாஸ்திரி. அவர் கண்ட புதுமைகள் பல. பருவுடலுக்கு வேறாச நுண்ணுடலிருத்தலை அவர் கண்டுள்ளார். அவ்வுண்மை உறுதிப்பட்டே வருகிறது. நுண்ணுடல் உண்மையை அநுபவத்தில் கைவரப் பெறுவோர் பிரகிருதி மாயாகாரிய மாய பருவுடலுடனும் வாழ்வு நடாத்தலாம். அவர்க்குக் காற்றுணவு பருமையில் வேண்டுவதில்லை. அவர் செயற்கைக் காற்றுத் துணையின்றி இமய உச்சி நோக்குதல்கூடும். நம் முன்னோர் கண்ட இயற்கை முறை இதுவே.

வெள்ளிமலையென்னுங் கயிலாயமலை, பருமைக் காற்றெல்லையைக் கடந்தொளிர்வ தென்பதையும், அக்காற்றுப் போதிய அளவின்றி நன்கு வாழ இயலாத பருவுடலுணர்வுடையார் அதன்பால் அணுகல் அரிதென்பதையும் நுண்ணுடலுண்மையை அநுபவத்தில் உணர்ந்தவரே அதனிடஞ் செல்லல் இயலுமென்பதையும் மக்களுக் கறிவுறுத்த அறிஞர் எழுதிய கதைகள் பலவுண்டு. அவைகளுள் இராவணனைப் பற்றிய கதைக் குறிப்புப் பெரிதும் வழக்கிலிருக்கிறது.

இராவணன் விமானமேறிக் கயிலைவழிச் சென்றானென்றும், அப்பொழுது அவன் மேற்செல்லாதவாறு தகையப்பட்டானென்றும், அவன் அம்மலையை அகழ்ந்தெடுக்க முயன்றானென்றும், சிவபிரான் கால்விரலா லூன்றத் திணறினானென்றுஞ் சொல்லப்படுகின்றன. நுட்பங்களைக் கதைகள் வாயிலாகத் தெரிப்பது பண்டை மக்கள் மரபுகளுளொன்று. இக்கதைக்கணுள்ள நுட்பமென்னை ?

இராவணன் பிரகிருதி உடலுணர்வில் மூழ்கினவன். அவன் நுண்ணுடல் உண்மையை அநுபவத்தில் உணராதவன். அவனுக்குக் காற்று இன்றியமையாதது. அஃதருகியுள்ள இடத்தில் அவன் புகுந்தமையான், அவன் தகையப் பட்டானென்க. அவன் மலையை அகழ்ந்தெடுக்க முயன்ற வேளையில் போதிய காற்றில்லா இறுக்கத்தால் அவன் நீரினின்றெடுக்கப்பட்ட மீன் போன்றவனாய்த் திணறிப் பருமைக் காற்றுள்ள இடத்துக்குத் திரும்பி ஓடலானான். அந்நாளில் தற்போதைய செயற்கைக் காற்றுப்பை அவனிடமில்லை !

அப்பர் சுவாமிகள் பருவுடலுணர்வுடன் கயிலைநோக்கிய வரலாற்றை நீங்கள் அறிவீர்கள். அவர் தொண்டு தமிழ் நாட்டுக்கு அவ்வேளையில் மேலும் மேலுந் தேவையாயிருந்தமையான், ஆண்டவன் அவருக்கு நுண்ணுடல் உணர்வு நல்காது, அவரைத் திருப்பி, அவர் கொண்ட வேட்கையை மட்டுந் தணிக்கத் திருவையாற்றில் கயிலைக் காட்சி வழங்கினானென்று சொல்லப்படுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வுலகில் தமது கடமைகளையெல்லாம் நிறைவேற்றி முடித்த பின்னை ஆண்டவனருளால் நுண்ணுடலுணர்வை அநுபவத்தில் பெற்று, அக்கோலத்துடன் கயிலை நோக்கினார். அவர் நுண்ணுடல் பெற்றேகியதற்குச் சரித்திரத்தில் சான்றிருக்கிறது. அவ்

வேளையில் இமயச் சாரலிலிருந்த உபமன்யு முனிவர் ஒரு பேரொளியின் வருகையைக் கண்டு எழுந்து தொழுதன ரென்றும், அவ்வொளி சுந்தரமூர்த்தியென்று தம்மைச் சூழநின்ற மற்ற முனிவர்கட்கு அவர் அறிவித்தனரென்றுஞ் சரித்திரஞ் சொல்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானைமீதிவர்ந்து சோதி மயமாய்க் கயிலை நோக்கினாரென்று சொல்லப்படுவது, அவர் நுண்ணுடலுணர்வுடன் நோக்கினா ரென்பதை விளக்குவதாகும்.

காரைக்காலம்மையார் கயிலைசென்று திரும்பியதும் இங்கே நினைவிற்கு வருகிறது. தம்மைத் தெய்வமென்று நாயகன் தொழுத அப்போதே, காரைக்காலம்மையார் உடலை உதறி எற்புடல் தாங்கினாரென்று சரிதஞ் சொல் கிறது. அம்மையார் உதறியது பிரகிருதியையென்க. பிர கிருதி மாயா உடலையற்ற அம்மையாருக்குப் பருமைக் காற்றுத் துணை எற்றுக்கு? ஆதலால் அவர் கயிலை சென்று திரும்பியதில் வியப்பொன்றுமில்லை. அம்மையார் நுண் ணுடல் பெற்றமையால் அவர் பேயாரென்றழைக்கப் பட்டனர்.

## கௌரிசங்கரம்

பருமைக்காற்றருகிய கயிலையின் ஒளி இமயத்தின் இருபதினாயிரம் அடியிலேயே வீசத் துவங்குகிறது. அவ் வொளி பெருகிப் பெருகிப் பேரொளியாய் முடியில் திகழ் கிறது. அவ்வெள்ளிய அமைதியொளி திகழும் முடியே கௌரிசங்கரமென்பது. இதை 'எவரெஸ்ட்' (Everest) என்று இக்காலத்தார் கூறுப. இமய முடிகளில் தலையாயது இதுவே.

இக்காலப் பிரகிருதி மக்களுள் செயற்கை முறைபற்றி இன்னுங் கௌரிசங்கரத்தை அணுகினோர் எவருமில்லை.

அதை நண்ண முயன்றுவரும் ஐரோப்பியருள் ஒரு கூட்டத்தார் இமயத்தின் இருபத்தாறுயிரம் அடிவரை சென்று திரும்பினர். இன்னும் மூவாயிரமடி ஏறிச்செல்லல் வேண்டும். இமய முடியாகிய கௌரிசங்கரத்தை அடைதல் வேண்டுமென்னும் முயற்சி இன்னும் விடப்படவில்லை. சிலர் அம்முயற்சியில் முனைந்தே நிற்கிறார். அவர்தம் முயற்சிகளெல்லாம் செயற்கை முறைபற்றியே செல்கின்றன. செயற்கை வழியிலாதல் கௌரிசங்கரத்தைக் காண்டல் சிறப்பேயாகும்.

செயற்கை முறைபற்றிக் கௌரிசங்கரத்தைக் காண முயல்வோர் தம் முயற்சியில் வெற்றி பெறினும், அவர்க்கு அதன் புறம் புலனாகுமேயன்றி, அதன் அகம் புலனாகாது. இயற்கை முறைபற்றி ஆண்டுப் போதரும் ஒளி வண்ணர் கட்குக் கௌரிசங்கரத்தின் உள்ளுறை புலனாகும். அவ்வுள்ளுறை இமயத்தின் உயிர். அவ்வுயிர் இமயவளவில் நிற்கவில்லை. அது பிரகிருதி புவனங்களை இயக்கும் ஆருயிராக நிற்கிறது.

அவ்வுயிர் எது? அது பெண் ஆண் குழந்தையென்னும் முக்கூறுகளுடன் வீற்றிருக்குஞ் சீகண்ட சிவமென்க.

சீகண்டர்

இமயத்தில் சீகண்ட சிவம் வீற்றிருப்பது போல, மேருவில் மகேசுர மூர்த்தமும், சிவலோகத்தில் சதாசிவ மூர்த்தமும் வீற்றிருக்கின்றன. அவைகளும் ஆங்காங்கே பெண் ஆண் குழந்தை வடிவாகவே வீற்றிருக்கின்றன.

சீகண்டர் பிரகிருதி மாயா புவனங்களை இயக்குந் தலைவர். மகேசுரர் அசுத்த மாயா புவனங்களை இயக்குந் தலைவர். சதாசிவனார் சுத்த மாயா புவனங்களை இயக்குந் தலைவர். இவர்களை இயக்குவது தற்பர சிவம்.

தற்பர சிவம்

தற்பர சிவமே பரம்பொருள். அது நீக்கமற எங்கும் நிற்பது. அதற்கு ஊர் பேர் வடிவம் ஒன்றுமில்லை. ஆராய்ச்சியில்லாதார் தற்பர சிவத்துக்கும் புவனத் தலைவர்கட்கும் வேற்றுமையுணராது வாயில் வந்தவாறு பிதற்றுவர். தற்பர சிவத்தின் இயலை,

'பலகலையா கமவேதம் யாவையின் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும்அரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் பரசிவமென் பர்தெளிந்து ளோரே'

என வருஉஞ் சாத்திரத்தானுணர்க.

குருமார்கள்

சாத்திரங்களை முறையாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவு பெற்றோர்க்குத் தற்பர சிவத்தின் இயலும், அத் தற்பர சிவத்தின் திருவருளால் புவன கர்த்தர்களாய் வீற்றிருந்தருள்வோர்களின் இயலும் நன்கு தெரியும். புவனகர்த்தர்கள் தற்பர சிவத்தை நினைந்து நினைந்து, சிவமாந்தன்மை யெய்தி, கருவிகரணங்களெல்லாம் அம்மயமாய்ப் புவனங்களை இயக்குவதோடு, பக்குவமடைந்த உயிர்கட்குத் தாங்களே நேராகவோ அல்லது வேறு வாயிலாகவோ உண்மையை அறிவுறுத்தும் மெய்க்குரவர்களாகவுமிருந்து கடனாற்றுவோராகிறார்கள்.

இவர்களைச் சிலர் அன்பு மேலீட்டான் முழு முதற் பொருளேயென்று போற்றுகிறார். குருமாரைத் தெய்வமாகப் போற்றும் ஒரு மரபும் உலகில் நிலவி வருகிறது.

இம்மரபினர் முழுமுதற்பொருள் ஊர் பேர் வடிவம் ஒன்று மில்லா ஒன்றுதலினாலும், அதன் விளக்கம் குருமாரிடம் மிளிர்தலாலும், அக்குருமாரைத் தெய்வமாகப் போற்றுதல் முறையென்றும், நினைவுக்கெட்டாத் தெய்வத்தை வேறு வழியில் நினைத்தல் இயலாதென்றும், ஆதலின் குருமார் வாயிலாகவே வழிபாடு நிகழ்த்தல் வேண்டுமென்றுங் கூறு கிறார். இவர் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டுச் சிலர், குருமாரைக் குருமாராகவே கோடல்வேண்டுமென்றும், அவரை எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகப் பாவித்துப் போற்றுதல் கூடாதென்றுங் கூறி, உறுதியில் நிற்கிறார்.

உலகம் பலவிதம். எவ்வழியிலாதல் தெய்வ வழிபாடு நிகழ்தல் வேண்டும். தெய்வமென்னும் பெயரால் நிகழ்த்தப் படும் வந்தனை வழிபாடுகள் யாவும் மெய்த் தெய்வமொன்றுக்கே சேரும். தெய்வம் ஒன்றே. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவ னும்', 'ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வம்' என்றார் திருமூலர். மீண்டும் அவரே,

**தெய்வ மொன்றே**

'அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே'

என்று அருளியிருக்கிறார். வேண்டற்பாலது அன்பு வழி பாடு. வழிபாட்டு முறையில் போர் முறை வகுத்தல் அறி யாமை. இது நிற்க.

புவன கர்த்தர் ஒவ்வொருவரும் பெண் ஆண் குழந்தை கோலமாக வீற்றிருப்பதென்னை என்று சிலர் கருதலாம். இதன் அடிப்படையான காரணத்தை நோக்குதல்வேண்டும்.

முழுமுதற் பொருள் சத் - சித் - ஆனந்தமாயிருப்ப தென்று சொல்லப்படுகிறது. சத் - உண்மை; சித் - அறிவு; ஆனந்தம் - இன்பம். உண்மையுள்ள இடத்தில் அறிவுமுண்டு; இன்பமுமுண்டு. அறிவுள்ள இடத்தில் உண்மையுமுண்டு; இன்பமுமுண்டு. இன்பமுள்ள இடத்தில் உண்மையுமுண்டு; அறிவுமுண்டு. இவ்வாறே ஒன்றுள்ள இடத்தில் மற்றிரண்டுமிருத்தல் இயல்பு. அகலமும் நீளமும் உயரமும் ஓரே பொருளிலிருத்தல்போல, இம்மூன்றியல்புகளும் ஓரே முழுமுதலிடத்திலிருக்கின்றன. மூன்றியல்களையும் மூன்று தனிப்பட்ட பொருளாகக் கோடல் தவறு.

சத் சித்
ஆனந்தம்

சத் ஆணாகவும், சித் பெண்ணாகவும், ஆனந்தம் குழந்தையாகவும் அவ்வவ்வியல்களின் கூறுகளுக்கேற்ப உருவகிக்கப்பட்டன. இம்மூன்றியல்புகளுடைய பரம்பொருளைப் புவன கர்த்தர்கள் நினைந்து நினைந்து, அதுவாய் விளங்குவோர்களாதலின், அவர்கள்பாலும் அவ்வியல்புகள் முகிழ்த்திருக்கின்றன. ஆகவே, பெண் ஆண் குழந்தையென்பன ஒன்றன் தோற்றமென்றுணர்க.

பெண் ஆண் குழந்தை என்னும் மூன்றும் நம் நாட்டில் மும்மூர்த்திகளென்றும், சில இடங்களில் பிதா குமாரன் பரிசுத்தஆவி யென்றும் வழங்கப்படுகின்றன. அவை இன்னும் பலவிதமாகவும் வழங்கப்படுகின்றன. அப்பலவற்றுள் சில வருமாறு:— பிர்மா - விஷ்ணு - ருத்ரன் (ஹிந்துக்கள்); ஒஸிரிஸ்-ஐஸிஸ்-ஹோரஸ் (எகிப்தியர்); ஒடின் - பிரீயா - தார் (ஸ்காண்டிநேவியர்); ஆனு - இயா - பேல் (அஸ்ரியர்); தௌலாக் - பான் - மொல்லாக் (துருயுதர்); அமிர்தாப்பர் - அவலோகீதீசுரர் - மன்ஜுசுரி (வடபுலப் புத்தர்); கேதர் - பினா - சொக்மா (யூதர்); அஹுரமஜதர் - மித்திரர் - அஹ்ரிமான்

மும் மூர்த்திகள்

(பாரஸீகர்). ஓருண்மை, உலகில் பலவிதமாக வழங்கப் பட்டு வருகிறது.

யான் பிரகிருதி உலகில் வாழ்பவன். எனக்கு இவ் வுலகத் தலைவருங் குருவுமாயுள்ள சீகண்ட சிவத்தின் திரு வருள் வேண்டும். அவர் வாயிலாகவே தற்பர சிவத்தை யான் உணர்தல் வேண்டும்.

சீகண்ட சிவம் தென்முகப் பரமாசாரியாராக வீற்றிருக் கிறாரென்பது சைவசமயக் கொள்கை. இவரைப் பிளவட்ஸ்கி அம்மையார் மௌனமூர்த்தி (Silent Watcher) என்று சொல்கிறார். பிளவட்ஸ்கி அம்மையார் தவத்தால் உணர்ந்து உலகுக் குணர்த்திய குரு சந்தானத் தோற்றம், பெரிதும் சைவ சமயங் கூறுங் குரு சந்தானத் தோற்றத்துடன் ஒத்திருக் கிறது. குருமார்க் கெல்லாந் தலைவராக வீற்றிருப்பவர் மௌனமூர்த்தி (Silent Watcher) என்றும், அவரெதிரில் நால்வர் வீற்றிருக்கிறாரென்றும், அவருள் ஒருவர் இளம் வடிவினராய்த் தலைமை பெற்றிருக்கிறாரென்றும், அவர்தம் தொடர்பு கொண்ட திருக்கூட்டங்களிருக்கின்றனவென்றும் அவசியம் நேரும்போது அவருள் எவரேனும் உலகுநோக்கி அறம் வளர்த்துச் செல்வரென்றும் அம்மையார் உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்.

மௌனமூர்த்தி

மௌனமூர்த்தியை நாம் தக்ஷிணாமூர்த்தி என்கிறோம். இளமை வடிவினரைக் குமரர் என்கிறோம். மௌன மூர்த்திக்கும் இளமை வடிவினர்க்கும் அம்மையார் கூறி யுள்ள இயல்புகள், பெரிதும் சைவ சமயம் தக்ஷிணாமூர்த்திக் கும் குமாருக்குங் கூறும் இயல்புகளுடன் ஒத்திருத்தல் கவனிக்கத்தக்கது. ருஷியாவினின்றும் போந்த ஓர் அம்மையார்க்குத் தவத்தால் இந்நுட்பங்களெல்லாந் தோன்றலாயின.

முழுமுதற்பொருள் ஒன்றே. அதை உணர்தற்கு மோனம் வேண்டும். மோனம் வழங்குவது அழியா இளமை. மோன நிலைக்கும் இளமைப் பேற்றுக்கும் அறிகுறியாக தக்ஷிணாமூர்த்தியுங் குமரரும் வீற்றிருக்கிறார். குமாரகுரு வாயிலாக மோனநிலையும், மௌனமூர்த்தி வாயிலாக முழு முதல் உணர்வும் பெறுதல்கூடும்.

சொல்லாமற் சொல்லும் தென்முகப் பரமாசிரியர் குறிப்புணர்ந்து இவ்வுலகை நடாத்தும் குமாரகுருவின் ஆணைவழி நிற்பவரே மற்ற மற்ற குருமார். குருமார்க்குத் தீர்க்க தரிசிகளென்றும், தீர்த்தங்கரர்களென்றும், நபிக ளென்றும், புத்தர்களென்றும் பலதிறப் பெயர்கள் வழங்கப் படுகின்றன. குருமார் சமயம் நேரும்போது உலகில் பலவிடங்களிற்றோன்றிக் காலதேச வர்த்தமானத்துக்கேற்ற வண்ணம் அறநெறியோம்பிச் செல்வார். இவர் ஓரிடத் திருந்து போதாலையும், ஓரறத்தை அறிவுறுத்தலையும் உணரா உலகம், பன்முகச் சமய உணர்வு கொண்டு பிணங்கிப் போரிடுகிறது.

இப்பிணக்குகளைப் போக்கிச் சமரச சன்மார்க்கத்தை வளர்க்க இந்நாளில் தோன்றிய பெரியோர்கள் பிளவட்ஸ்கி அம்மையார், இராமகிருஷ்ணர், இராமலிங்க சுவாமிகள் முதலியவர்கள். இவர்களுள் பிளவட்ஸ்கி அம்மையார் குரு பரம்பரையை நன்கு விளக்கித் தெளிவுபடுத்தியுள்ளார்.

இமயத்தில் வீற்றிருந்தருளுந் தலைமைக் குரவரை நாம் சீகண்ட சிவமென்றும் தென்முகப் பரமாசாரியரென்றுஞ் சொல்கிறோம். சமணர் அவரை விருஷபதேவரென்றும், அருகரென்றுஞ் சொல்கிறார். பௌத்தர் அவரை ஆதி புத்த ரென்று கூறுகிறார். மற்ற மற்ற சமயங்களிலும் வழங்கப் படுஞ் சில பெயர்கள் கயிலை மௌனமூர்த்தியைக் குறிக்

கின்றன. மொழி வேற்றுமைகள் உலகையும் வேற்றுமைப் படுத்துகின்றன !

சமணர் விருஷப தேவரைப்பற்றிக் கூறும் வரலாறும், வடிவும், பிறவும் பெரிதுஞ் சைவர் கூறும் மோனமூர்த்தியின் வரலாற்றுடன், வடிவுடன், பிறவுடன் ஒத்திருக்கின்றன. விருஷபதேவர் மெய்ந்நிலை யுற்றதும், கயிலை போந்து மோனத்தில் வீற்றிருக்கலானார் என்று சமண நூல்கள் கூறுகின்றன. விரிவு சமண நூல்களிற் காண்க.

ஜப்பானில் நிலவும் பௌத்தம் மஹாயானம் என்பது உங்கட்குத் தெரியும். அப்பௌத்தம் பெரிதும் சைவத்துடன் ஒத்து நிற்பது. அப்பௌத்த ஞானிகளிற் சிலர், அமைதிநிலை பெறுதற்பொருட்டு, இமயம் போந்து, இன்புற்று, எழுதிய குறிப்புக்களில், கயிலாய உச்சியில் மோன நிலையிலுள்ளவர் ஆதி புத்தர் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

உலகிடைப்போந்து அறம் வளர்த்த புத்தர் பலர். புத்தரென்பது பெரு நிலை அடைந்த குருமாரைக் குறிக்கும் ஒரு சொல். ‘கௌதம புத்தர்’ என்பது, கௌதமர் என்பவர் புத்தர் நிலையடைந்ததைக் குறிப்பதாகும். கௌதமருக்கு முன்னரும் பலர், புத்தர் நிலையடைந்துள்ளனர். விளக்கம் பௌத்த மூல நூல்களிற் பார்க்க.

கயிலாய உச்சியிலுள்ள மௌன மூர்த்தியைப் பலர் பல பெயரால் அழைக்கிறரென்று கொள்வதே பொருத்தம். அக்கயிலைநாதனைச் சுவாமி விவேகாநந்தர், ‘ஏ ! இந்தியாவே ! நீ தொழுந்தேவன் முனிவர்க்கு முனிவன் என்பதை - எல்லாந் துறந்த சங்கரன் என்பதை - உமைக்கு நாயகன் என்பதை - மறவாதே’ என்று கூறியதும் ஈண்டு உன்னத்தக்கது.

இப்பிரகிருதி உலகின் தலைமைக்குரவர் வீற்றிருக்கும் இடம் இமயவுச்சி - அதாவது கௌரி சங்கரமென்று உணர்க. கௌரி சங்கரன் வீற்றிருக்கும் இடம் கௌரி சங்கரம் என்னும் பெயர்பெற்றது.

இமயம் ஒரு பெருங்குரவரைத் தன் முடியில் தாங்கி நிற்கிறது. காலதேச வர்த்தமானத்துக்கேற்ற முறையில் குருமாரை அஃது உலகுக்கனுப்புகிறது. சமய ஞானத்துக்குத் தாயகமாக இமயம் - இமயக் கயிலை - கௌரி சங்கரம் - பொலிகிறது. ஆகவே, இமயத்தின் உயிர் சீகண்ட சிவமென்றும், அவ்வுயிரின் உடல் இமயமென்றுங் கொள்க. இமயம் பல்லாற்றானுந் தெய்விக முடையதென்க.

## தியானம்

இமயமலைச் சிறப்புக்கள் இன்னும் பலவுண்டு. அவைகளுள் தனிமைச் சிறப்பென்று யான் கருதுமொன்றை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன். அஃது இமயம் தியானத்துக்கு மிகவும் உரிமையுடையதென்பது.

தியானம் வாழ்விற்கு இன்றியமையாதது. தியானம் உடலுக்கும் உயிருக்கும் நலஞ் செய்வது. உள்ளொளிப் பெருக்கத்துக்குத் தியானம் வேண்டற்பாலதே. தியானமில்லாத வாழ்வு ஞாயிறொளி படாத இடத்தை ஒப்பது.

மனிதனிடத்தில் இயற்கை அறிவொளி இருக்கிறது. அவ்வொளி ஆணவத்தால் மறைபட்டுக் கிடக்கிறது. ஆணவம் நீங்க நீங்க மனிதனிடத்தில் தெய்விக உணர்வு பெருகிக்கொண்டே போகும். ஆணவ நீக்கத்துக்கும் அறிவொளி ஆக்கத்துக்குந் தியானம் பெருந்துணை செய்யும்.

விளங்காத நுட்பங்களெல்லாம் தியானத்தால் விளங்கிவிடும். தியானம் அலையும் மனத்தை அமைதியில் நிறுத்தும். உள்ளத்திலும், பொறி புலன்களிலும், மற்றக் கருவி

காரணங்களிலும் படிந்துள்ள மாசுகளைத் தியானம் அரித்துத் தள்ளி, அவைகளை (பொறி புலன்களை)த் தூய்மைப் படுத்தும்.

தியானம், பருவுடல் (ஸ்தூல சரீரம்)-நுண்ணுடல் (சூக்ஷ்ம சரீரம்) - முதலுடல் (காரண சரீரம்) - நிலைகளைப் புலப்படுத்தி, அகக் கண்ணைத் திறந்து, யோகக் காட்சியை வழங்கும். தியானம் சிற்றறிவைப் பேரறிவாக்கி, அதைக் கட்டில்லாத தொன்றுக்கும். அப்பேரொளி முன்னே, ஒரு கோடி ஞாயிறொளி என் செய்யும்? இஃது அதன் முன்னே மின்மினிப் போலத் தோன்றும்.

தியானம், பிணி மூப்பு சாக்காட்டைப் போக்கும் தியானம், மனிதனைத் தெய்வமாக்குமென்று சுருங்கச் சொல்லலாம். இன்னோரன்ன சிறப்புக்களெல்லாம் தியானத்தில் உண்மையாலல்லவோ யோகங்களிலெல்லாந் தலையாயது தியான யோகமென்று ஆன்றோர் கூறிப்போந்தனர்!

தியானத்துக்கு முதல் முதல் ஏதாயினுங் குறி வேண்டும். 'மலை, சிறந்த இயற்கைக் குறி' யென்று சொல்ல வேண்டுவதில்லை. மலையைத் தியானத்துக் குரிய இடமாகவுங் கொள்ளலாம்; தியானிக்கப் படுவதாகவுங் கொள்ளலாம்; தியானத்துக்குரிய பிறவாகவும் கொள்ளலாம். என்னை? மலையை உற்று நோக்குங்கள். அஃது எப்படி நிற்கிறது?

மலையும் தியானமும்

மலை, தியானம்போல் நிற்கிறது. தியானம் போலவா - தியானமாகவே நிற்கிறது. மலை, தியானத்தை அறிவுறுத்துகிறது. தியானத்துக்கு வேறோர் ஆசிரியர் வேண்டுவதில்லை. மலையே இயற்கைப் பேராசிரியாக நிற்கிறது. பொது மலைநிலை இவ்வாறாயின், சிறப்பு மலையாசாம் இமயத்தின் நிலை எவ்வாறிருக்கும்?

'இமயத்தை எப்படித் தியானிப்பது; இமயம் எங்கே இருக்கிறது; நாம் எங்கே இருக்கிறோம்' என்று சிலர் கருதலாம்; சிலர் வினவலாம்; சிலர் நகைக்கலாம். இமயத்தின் பொருட்டு உங்களை இராவணன் முயற்சியில் தலைப்படுமாறு யான் சொல்லப்போவதில்லை; அல்லது தற்காலச் செயற்கை முறையிலாதல் தலைப்படுமாறு யான் தூண்டப்போவதில்லை. இச்செயற்கை முறை ஒரு சில ஆராய்ச்சியாளர்க்கே பயன் படுவது. எல்லாராலும் அதைக் கொள்ளல் இயலாது. வேறு வழி என்னை?

**இமயமும் தியானமும்**

இந்நாளில் நேராகவோ வேறு வாயிலாகவோ இமயத்தை உணராதார் அரியர் என்று தொடக்கத்தில் சொல்லியிருக்கிறேன். எவ்வழியிலோ இமயத்தை உணர்ந்த உங்கட்கு இமயத்தைக் காட்டல் எளிது; மிக எளிது. இதோ இமயத்தைக் காட்டுகிறேன்; பாருங்கள்.

**இமயக் காட்சி**

சகோதரிகளே! சகோதரர்களே! இமயத்தை நினையுங்கள். இமயம் வந்துவிட்டது. அதை நோக்குங்கள்; அதன் அகலத்தை எண்ணுங்கள்; அதன் நீளத்தை நினையுங்கள்; அதன் உயரத்தை உன்னுங்கள்; இமயத் தியானத்தில் அமருங்கள். * * * * * * இமயப் பசுங்காடு தோன்றி மறைகிறது - அதாவது மாயை ஒதுங்குகிறது - நம்பாலுள்ள கரடி புலி முதலியன ஓடுகின்றன. கரும்பாறை தோன்றி இரிகிறது - அதாவது ஆணவம் ஒடுங்குகிறது - நம்பாலுள்ள கழுகு கண்டபேரண்டம் முதலியன பறந்தோடுகின்றன. வெண் கயிலை - புண்ணியத்திரட்சி தோன்றுகிறது - அதாவது நிர்வாணம் அல்லது சத்திநிபாதம் அல்லது கிறிஸ்துவின் வெண்மை உறுகிறது. உற்றதும் இமயக் கொடியின் தவக்கோலம் காட்சியளிக்கிறது - அதாவது

அமைதிப் பெண்மை கூடுகிறது. உடன் மௌன வடிவம் புலனுகிறது • அதாவது மோனம் எய்துகிறது ; அங்கே சொல்லொணு அழகு திரண்ட செவ்விய இளமை வடிவு நிற்கிறது ; அதாவது சாவா மூவா இளமைப் பேறு உண்டாகிறது. இவ்விளமைப் பேறே அழியா இன்பம்.

இஃதொரு நொடிப் பயிற்சி. நாடோறும் இத் தியானத்தைப் பெருக்கப் பெருக்க நினைவிலும் கனவிலும் இந்நிலைகள் தோன்று நிற்கும். முடிவில் அது மேலான இன்பத்தில் நிறுத்தும்.

புற இமயத்துடன் அகத்தைத் தொடர்புப் படுத்தி, உயிர்களை இமயமாக்குவது இமயத் தியானம். இமயத் தியானம் பெரிய தொன்றைக் குறிப்பது. அறிவுப் பெருக் கத்துக்கும் தெய்வ உறவுக்கும் *இமயத் தியானம் வேண்டற்பாலது.

ஒவ்வொருவரும் தியானத்தில் இமயமாதல் வேண்டும். அதற்கென்றே பலதிற வழிபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. வழிபாடுகளின் உள்ளக்கிடக்கை தியானத்தில் இமயமாக வேண்டுமென்பதே. சொல்லொணுப் பெரிய நிலையே இமயமென்க. அதற்கறிகுறி புற இமயம்.

அப்பேரிமயம் நமது பாரத நாட்டின் முடியாயிருக் கிறது. மலையை - உலகில் உயர்ந்த மலையை - முடியாக் கொண்ட தாயின் வயிற்றில் நாம் பிறந்திருக்கிறோம். இமயப் பாரதப் புதல்வர்களென்னும் பெயரை நாம் தாங்கி நிற் கிறோம். நமது குறிக்கோள் எதுவாயிருத்தல் வேண்டும் ?

---

* The stainless ramps of huge Himala's wall,

*   *   *

Led climbing thought higher and higher,
Until it seemed to stand in heaven,
And speak with God. — '*The Light of Asia*'

இமய நோக்கம் நமது குறிக்கோளாயிருத்தல் வேண்டும். இப்பொழுது நமது நோக்கம் யாண்டுச் செல்கிறது? வெட்கம்! வெட்கம்! நமது கருத்தை இழிந்த கீழ்நோக்கில் புகுத்தவே நாம் பயின்று வருகிறோம்.

இமய வாடையில் நாம் நிற்கிறோமா? இல்லையே! தற்போது நாம் பெற்றுவருங் கல்வி இமய வாடையில் நம்மை நிறுத்துகிறதா? அது நம்மை மேலைக்காற்றிற் பறக்கச் செய்கிறது. இமய நாட்டில் பிறந்தவருள் இப்பொழுது எத்துணைப் பேர் இமயமாக இருக்கிறார்? அவர் தந் தொகையை விரல் வைத்து எண்ணிவிடலாம். அன்பில் ஒரு காந்தி இமயமாக நிற்கிறார்; கவியில் ஒரு தாகூர் இமயமாக விளங்குகிறார்; இயற்கை ஆராய்ச்சியில் ஒரு போஸ் இமயமாகப் பொலிகிறார். எத்துணைக் காந்திகள்-எத்துணைத் தாகூர்கள் - எத்துணைப் போஸ்கள் பிறந்தநாடு - வளர்ந்த நாடு - வாழ்ந்தநாடு - நம் பாரதநாடு. மற்ற நாடுகளில் இந்நாளில் இமயம் போன்றவர் பலரிருக்கிறார். இமய வாடை அங்கே திரும்பியிருக்கிறது போலும்! இந்நாளில் இமய உச்சி காண முயல்வோர் யாவர்?

இமயத்தில் பிறந்த நாம் இமயத்தை மறந்தோம்; இமயத் தியானத்தை மறந்தோம்; இமயத் தெய்வத் திருவருளை இழந்தோம்; கல்வியறிவிலுஞ் செல்வச் சிறப்பிலும் வறியரானோம். அவ்வறுமையைப் போக்க இமயத் தியானத்தைக் கொள்ளுங்கள்; இமயம்போன்ற மேலான எண்ணங்களை எண்ணுங்கள்; செயல்களைச் செய்யுங்கள்.

இமயம் வெறுங்கல்லாக நிற்கவில்லை; மண்ணாக நிற்கவில்லை. அஃது உயிர்கட்குப் பல வழியிலும் பயன்படுகிறது; துணை செய்கிறது. அப்பயனுக்கு - அத்துணைக்கு- அஃது ஏதாயினும் கைம்மாறு கருதுகிறதா? இமயத்தின்

கருணை - கங்கையாக - சிந்துவாக - மற்ற நதிகளாகப் பொழிகிறது.

மனிதராகப் பிறப்பதால் மட்டும் பயனில்லை. மனிதச் செயலிருத்தல் வேண்டும். மனிதச் செயல் யாது? மற்றவர்க்குப் பயன் கருதாது பணி செய்தல்.

பணிசெய்தல்

'என்கடன் பணிசெய்து கிடப்பதே.' இதற்கு இமயம் எடுத்துக்காட்டாக நிற்கிறது. இமயம் போல மனிதன் மற்றவர்க்குப் பயன்படல் வேண்டும்; துணை செய்தல் வேண்டும். இமயக் கங்கைபோல - சிந்து போல - மற்ற நதிகள் போல - மனிதன் கருணை பொழிதல் வேண்டும். அக்கருணை வெள்ளத்தில் மூழ்கினால் - வெண் கயிலையை - நிர்வாணத்தை - சத்திநிபாதத்தை-கிறிஸ்துவின் வெண்மையைப் - பெறலாம்; அழியா இன்பத்தை நுகரலாம்.

ஆதலால் அன்பர்களே! இமயத் தியானத்தைப் பெருக்குங்கள்; அதைப் பெருக்குதற்குரிய வழியில் நிற்க முயலுங்கள். இமயத் தியானத்துக்கென நாம் அங்கும் இங்கும் அலையவேண்டுவதில்லை. கூடுமானால் இமயத்தை நேரே காண முயலுங்கள்; இயலாவிடின் கவலையுறுதேயுங்கள்; இமயப் படங்களாகிய கலைகள் - காவியங்கள் - ஓவியங்கள் - திருமலைச் சருக்கங்கள் - இமயம் போலிருக்கின்றன. அவைகளுடன் உறவு கொள்ளுங்கள்; அவைகளில் உலவுங்கள்; உங்கள் ஆடல் பாடல்களை அவைகளிற் செலுத்துங்கள். இமய எண்ணம் - இமய நோக்கம் - இமயத்தியானம் - பெறுவீர்கள்; இமயமாவீர்கள்.

அமைதி

கலைகள் - காவியங்கள் ஓவியங்கள் - திருமலைச் சருக்கங்கள் - நமக்கு வழங்குவதென்னை? அமைதி; அமைதி.

அமைதி நம்பெருஞ் செல்வம். அதுவே அழியாச் செல்வம்; விழுச் செல்வம்; இமயச் செல்வம். அச்செல்வத்தை நம் முன்னோர் பலவழியிலும் நமக்கு வழங்கிச் சென்றனர்.

அமைதிக்கு இமயத்தைக் குறிக்கோளாக் கொண்டு, அங்கே இமயக்கொடி தவங் கிடக்கிறாளென்றும், தென் முகத் தெய்வம் மௌனமாக வீற்றிருக்கிற தென்றும், அத்தவமும், மௌனமுஞ் சேர்ந்து ஈனும் இயற்கையின் உள்ளுறையாம் அழியா அழகு மாறா இளமைக் கோலத்துடன் பொலிகிறதென்றுங் கலைகள் வாயிலாகவும், காவியங்கள் வாயிலாகவும், ஓவியங்கள் வாயிலாகவும், பிற வாயிலாகவும் அமைதிச் செல்வத்தைத் திரட்டித் திரட்டி நமக்கு வழங்கிய பெரியோர்கட்கு என்ன கைம்மாறு செலுத்த வல்லேம்? அவர்கள் நமக்களித்த செல்வத்தைச் சுருங்கிய முறையில் 'சாந்தம் சிவம்' என்று குறிப்பிடலாம். இச்சாந்தச் செல்வத்தை - சிவச் செல்வத்தை - நமக்கு வழங்கிய பெரியோர்களை வணங்குவோம். 'சாந்தம் சாந்தம் சிவம்' - இதுவே இமயம்.

கால வரம்பைச் சிறிது கடந்து விட்டேன். மன்னித்தருளுங்கள்; குற்றங் குறைகளைப் பொறுத்தருளுங்கள்.

சாந்தம்! சாந்தம்!! சிவம்!!!

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1